
இலங்கை மத்திய வங்கி
தொடர்பூட்டல் திணைக்களம்

# குறிப்பேடு

மலர் 29 இதழ் 5 2010 மே




# 2009

## மத்திய வங்கி ஆண்டறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற இலங்கையின் பொருளாதாரம்

இலங்கை மத்திய வங்கியின் சமூக, பொருளாதார இருமாத சஞ்சிகை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குறிப்பேடு

ISSN 1391 – 7676

2010 மே

ஒரு பிரதியின் விலை: ரூபாய் 10.00
வருடாந்த சந்தா: ரூபாய் 240.00
(தபால் கட்டணத்துடன்)

தொடர்பூட்டல் பணிப்பாளர், இலங்கை மத்திய வங்கி எனக் குறிப்பிட்டு காசுக்கட்டளை/ காசோலைகள் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைப்பதன் மூலம் 'குறிப்பேடு' சஞ்சிகையை மாதாந்தம் அஞ்சலில் பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர்,
தொடர்பூட்டல் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
த.பெ.இல. 590, கொழும்பு.


## மத்திய வங்கி ஆண்டறிக்கையின் மூலம் வெளிக்கொணரப்பட்டதன்படி 2009 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம்

[illegible]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்

## பொது நோக்கு

2009 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உருவாகிய கடுமையான சவால்களுக்கு பலம்பொருந்திய விதத்தில் தாக்குப்பிடிக் கக்கூடிய ஆற்றலை பிரதிபலிக்கும் வகையில் 3.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. ஆண்டின் இரண்டாவது காலாண்டிலிருந்து பொருளாதாரம் பலம்பொருந்திய விதத்தில் மீட்சியடைந்தமையும், இறுதிக் காலாண்டில் 6.2 சதவீத குறிப்பிடத்தக்க உயர் வளர்ச்சியை அடைந்தமையுமே இத்திருப்திகரமான முன்னேற்றத்திற்கு உதவியாயமைந்தது. 2009 ஆம் ஆண்டில் உலகளாவிய நிதியியல் மற்றும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக உருவாகிய தாக்கங்களை எதிர்கொள்வதற்கு இலங்கைக்கு நேரிட்டது. மூன்று தசாப்தங்களுக்கு அதிக காலம் நாட்டை அனர்த்தத்திற்கு உள்ளாக்கிய பயங்கரவாதத்திற்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் ஆண்டின் முற்பகுதியில் தீர்க்கமான திருப்புமுனையை அடைந்தது. உலகளாவிய பொருளாதார பின்னடைவின் முன்னே வெளிநாட்டு முதலீட்டாளர்கள் குறுகிய காலத்தினுள் தமது மூலதனத்தை மீளப் பெற்றமையின் காரணமாக நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகள் மற்றும் திரவத்தன்மை முகாமைத்துவத்தின் மீது கடும் அழுத்தம் ஏற்பட்டது. கேள்வி வீழ்ச்சியடைந்தமையின் பெறுபேறாக நாட்டின் வெளிநாட்டு வர்த்தகம் சுருங்கியமை மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரத் தொழிற்பாடுகள் மந்தகதியை அடைந்தமை அரசின் அரசிறையில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. இதைத் தவிர, பாதுகாப்பு அலுவல்கள், வட்டி, சம்பளங்கள் மற்றும் கூலிகள் அதேபோன்று மீள்குடியேற்றம் துரிதமாக நடைபெற்றமை, புனர்வாழ்வளிப்பு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கான அரச செலவுகள் அதிகரித்தமை அரச நிதித் தொழிற்பாடுகளில் கடும் அழுத்தத்தை ஏற்படுத்தின. இவ்வாறான முன்னெப்போதும் இல்லாததான சவால்கள் நிலவிய போதிலும், ஆண்டின் இரண்டாவது பகுதியின் போது பொருளாதாரம் மீட்சியடைந்தது. நீண்ட காலம் நிலவிய போர் முடிவடைந்தமை, பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து துணைநில் ஒழுங்கு வசதிகளைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை மற்றும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டைப் பேணிவருவதற்குத் தேவையான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டமை ஆகியன உள்ளடங்கிய திட்டமிடப்பட்டதும் உரிய நேரத்திலானதுமான கொள்கை வழிமுறைகள் உள்நாட்டுப் பொருளாதாரம் மீட்சியடைவதற்குப் பேருதவியாக அமைந்தது. பொருளாதாரம் தொடர்பில் முதலீட்டாளர்களின் நம்பிக்கை அதிகரித்ததன் மூலம் வெளிநாட்டு நிதி உட்பாய்ச்சல்கள் பாரிய அளவில் மீண்டும் நாட்டினுள் வரத்தொடங்கின. 2009 இன் இறுதியாகின்ற போது சென்மதி நிலுவையில் அமெரிக்க டொலர் 2.7 பில்லியன் அளவினதான, முன்னெப்போதும் இல்லாத வகையில் சாதனைமிக்கதொரு மிகையைப் பேணிவருவதற்கும், 2009 மார்ச் மாதத்தில் அமெரிக்க டொலர் 1.1 பில்லியனாக மிக உயர் மட்டத்தில் நிலவிய வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகள் 2009 இறுதியாகின்றபோது அமெரிக்க டொலர் 5.1 பில்லியன் உயர் சாதனை மட்டத்திற்கு அதிகரிப்பதற்கும் இது உதவியாயமைந்தது.

பணவீக்கத்தை கூர்மையான விதத்தில் குறைக்க இயலுமாயிருந்தமை 2009 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற குறிப்பிடத்தக்கதொரு வெற்றியாக இருந்தது. மத்திய வங்கியினால் கடந்த சில வருடங்களாக நடைமுறைப் படுத்தப்பட்ட நுண்மதியுடைய நாணயக் கொள்கை மற்றும் சர்வதேச சந்தையில் பண்டங்களின் விலை பெருமளவு குறைவடைந்தமை இதற்கு உதவியாயமைந்தது. கொழும்பு நுகர்வோர் சுட்டெண்ணின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படும் பணவீக்கம் 2008 யூன் மாதத்தில் 28.2 சதவீத உயர் பெறுமானத்தை அறிக்கையிட்ட போதிலும் 2009 ஆம் ஆண்டின் இறுதியில் அதனை 4.8 சதவீதம் வரை பெருமளவு குறைப்பதற்கு இயலுமாயிருந்தது. 2009 இல் சராசரி ஆண்டுப் பணவீக்கம் 1985 ஆம் ஆண்டின் பின்னரான மிகக் குறைந்த பெறுமதியாக, அதாவது 3.4 சதவீதமாக அறிக்கையிடப்பட்டது. நாணயக் கொள்கையைத் தளர்த்துகின்ற வாய்ப்பு இதன் காரணமாக மத்திய வங்கிக்குக் கிடைத்தது. உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியின் தாக்கத்திற்கு உள்ளாகிய உள்நாட்டுப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு உதவியாயமையக்கூடிய சூழ்நிலையொன்று இதன் காரணமாக மத்திய வங்கிக்கு உருவாகியது. இலங்கை மத்திய வங்கியுடன் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களில் பங்குபற்றுகின்ற நிதி நிறுவனங்கள் மாதாந்த உச்ச எல்லையைத் தாண்டியபோது அறவிடப்பட்டதும் வங்கிகளுக்கிடையிலான வட்டி வீதத்திற்கான உச்ச எல்லையாக வலுவிலிருந்ததுமான அபராத வட்டி வீதம் 2009 சனவரி மாதத்தில் 19 சத வீதமாகவே நிலவியது. அதனைப் படிப்படியாகக் குறைத்து 2009 மே மாதத்தில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்திற்கு சமமாக்குவதற்கு இயலுமாயிருந்தது. மேலும் மீள்கொள்வனவு வீதம் 7.50 சதவீதமாகவும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் 9.75 சாவீதமாகவும் பல கட்டங்களில் குறைக்கப்பட்டது. கொள்கை வட்டி வீதம் பெருமளவு குறைக்கப்பட்டதற்குப் பிரதிபலிப்புக் காட்டும் வகையில் குறிப்பிட்டதொரு காலதாமதத்துடனெனினும், சந்தை வட்டி வீதம் குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்தது. எவ்வாறாயினும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதாரம் மீட்சியடைதல் மந்தகதியில் இருந்தமை மற்றும் வங்கிகளின் மூலம் கடன் வழங்கப்படுகின்றபோது கவனமான வழிமுறைகள் கடைப்படிக்கப்பட்டமை ஆகிய காரணங்களால் தனியார் துறையின் கடன்களுக்கான கேள்வி குறைந்த மட்டத்தில் நிலவியது. எவ்வாறாயினும், முன்னர் ஒருபோதும் இல்லாத விதத்தில் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரித்தமையினால் ஆண்டின் முதற்பகுதியில் பண நிரம்பலின் வளர்ச்சி குறைந்த மட்டத்தில் இருந்தது. ஆண்டின் இரண்டாவது பகுதியில் பண நிரம்பல் அதிகரித்தது.

அரச ஒத்துழைப்புடன் மத்திய வங்கியினால் அமுலாக்கப்பட்ட கொள்கைகளின் காரணமாக ஒருசில உள்நாட்டு நிதி நிறுவனங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய சில நிதிக் கம்பனிகள் முறிவடைந்தமையினால் உருவாகக் கூடியதாயிருந்த பாதகமான தாக்கங்களைத் தவிர்ப்பதற்கு முடியுமாயிருந்தது. நீண்ட காலமாக நிலவிய பலம்பொருந்திய ஒழுங்குமுறையாக்கல் மற்றும் மேற்பார்வை கட்டமைப்பு அதேபோன்று மேம்படுத்தப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ முறைகளின் காரணமாக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு ரீதியில் உருவாகிய அதிர்ச்சிகளுக்கு தாக்குப்பிடிப்பதற்கு நிதியியல் முறைமையினால் இயலுமாயிருந்தது. அதன் மூலம் நிதியியல் முறைமையின் நம்பகத்தன்மையையும் பேணிவர முடியுமாயிருந்தது. எவ்வாறாயினும், உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியின் எதிர்விளைவுகள் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியமை வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களுக்கு சவாலாக அமைந்தது. மேற்படி பாதகமான சந்தை நிலைமையின் காரணமாக கடன் இடர்நேர்வு அதிகரித்த போதிலும் நிதி நிறுவனங்களால் தமது தொழிற்பாடுகளை இலாபகரமானதாகவும் சிறந்த மூலதனத்துடனும் பேணிக்கொண்டுநடாத்த முடியுமாயிருந்தது.

உள்நாட்டு ரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் உருவாகிய சவால்களின் காரணமாக 2009 ஆம் ஆண்டில் அரச நிதியியல் தொழிற்பாடுகள் பின்னடைவைக் காட்டின. ஆண்டினுள் வருமானத்தை அதிகரிக்கச் செய்கின்ற பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், பொருளாதாரச் செயற்பாடுகள் மந்தகதியில் நடைபெற்றமை மற்றும் இறக்குமதிகள் சுருங்கியமையின் காரணமாக அரசின் அரசிறை பெருமளவு குறைவடைந்தது. இதைத் தவிர, 2009 ஆம் ஆண்டின் முதற் பகுதியில் அரச செலவுகள் அதிகரித்தன. இதற்கு, பயங்கரவாதத்திற்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் தீர்க்கமான கட்டத்தை அடைந்தமையினால் பாதுகாப்புச் செலவுகள் அதிகரித்தமை, துரித புனர்வாழ்வளிப்பு, மறுசீரமைப்பு மற்றும் புனர்நிர்மாணிப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து பேணிவருதல், அதேபோன்று சம்பளங்கள், படிகளுக்கான செலவுகள் அதிகரித்தமை, வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் தொடர்ச்சியாக நடைபெறுகின்ற அரச முதலீட்டுக் கருத்திட்டங்களின் செலவுகள் காரணங்களாக அமைந்தன. இதன் பிரகாரம், 2009 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டவாறான இலக்கிடப்பட்ட வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.0 சதவீத இலக்கை நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை. அது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 9.8 சதவீதம் வரை விரிவடைந்தது. அதன் காரணமாக கடன் பெறுகின்ற தேவை அதிகரித்தது. 2009 ஆம் ஆண்டின் ஆரம்ப காலத்தில் வரவு செலவுப் பற்றாக்குறையை நிதியிடும் பொருட்டு உள்நாட்டு மூலங்களில் அதிகளவு தங்கியிருக்க வேண்டி நேரிட்டது. எவ்வாறாயினும், ஆண்டின் இறுதிப் பகுதியாகின்றபோது வெளிநாட்டு நிதியிடல்களைப் பெற்றுக்கொள்ள இயலுமாயிருந்ததன் காரணமாக அதிக செலவினத்தைக் கொண்ட ஒருசில உள்நாட்டுக் கடன்களைச் செலுத்தித் தீர்க்க இயலுமாயிருந்தது. நிதியியல் தேவைகள் அதிகரித்தமை மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெயரளவிலான வளர்ச்சி குறைவடைந்தமையின் காரணமாக கடந்த ஆண்டுகளில் நிலவிய பொதுப் படுகடனுக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையிலான விகிதம் குறைவடைகின்ற போக்கு மாற்றமடைந்தது. 2009 ஆம் ஆண்டில் இந்த விகிதம் அதிகரித்தது.

**1வது வரைபடம்**
**பொருளாதார வளர்ச்சியும் தொழிலின்மையும்**




நீண்ட காலம் நிலவிய பயங்கரவாதப் பிரச்சினையை முடிவுறுத்தி சமாதானம் மீண்டும் நிலைநாட்டப்பட்டதன் காரணமாக பொருளாதார சுபீட்சத்தை அடையப்பெறும் பொருட்டு மிகவும் சிறந்ததொரு பின்னணி உருவாகியுள்ளது. உரிய கொள்கைகளின் உதவியோடு நீண்டகால நிலைபேறான




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியை அடையப்பெறும் பொருட்டு சக்திவாய்ந்ததொரு அடித்தளம் இதன் பிரகாரம் உருவாகியுள்ளது. சமாதானம் உருவாகியுள்ளதன் ஊடாக ஏற்பட்டுள்ள வாய்ப்புகள், உலகளாவிய பொருளாதாரம் மீட்சியடைந்துள்ளமையினால் மேலும் பலப்படுத்தப்படும். தற்போதுள்ள குறைந்த பணவீக்கம் மற்றும் குறைந்தளவிலான வட்டி வீதங்கள் பொருளாதாரத் தொழிற்பாடுகளை மேம்படுத்துவதற்கு உகந்ததொரு சுற்றாடலை உருவாக்கும். இந்த வாய்ப்புகளிலிருந்து பயன்பெறும் பொருட்டு பொருளாதார வளர்ச்சியை விரைவாக்குவதற்கு இடையூறாகவுள்ள தடைகள் தொடர்பில் துரித தீர்வுகளை முன்வைத்தல் வேண்டும். பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவை விரிவாக்குவதற்கும் பொருளாதார செயற்பாடுகளின் வினைத்திறனையும் உற்பத்தித்திறனையும் மேம்படுத்தவும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதும் திட்டமிடப் பட்டுள்ளதுமான உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தித் திட்டங்கள் விரைவாக்கப்படுதல் வேண்டும். அதேநேரம், அரசிறையில் அதிக அழுத்தத்தைக் கொடுக்கின்ற அரச தொழில்முயற்சிகளில் அத்தியாவசியமான உள்ளமைப்பு ரீதியிலானதும் நிறுவன ரீதியிலுமான மாற்றங்களைச் செய்து அவற்றின் இலாபகரத் தன்மையையும் உற்பத்தித்திறனையும் அதிகரிக்கச் செய்யும் பொருட்டு விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். அரச நிதியியல் ஒருமைப்பாட்டை பலப்படுத்துகின்ற வேலைத்திட்டமும் தொடர்ச்சியாகச் செயற்படுத்தப்படுதல் வேண்டும். ஒட்டுமொத்தமான ஒழுங்குமுறையாக்கல் கட்டமைப்பும் மேலும் பலப்படுத்தப்படுதல் வேண்டும்.

அதேபோன்று, ஒட்டுமொத்தமான பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டில் தனியார்துறையின் வகிபாகத்தையும் பங்களிப்பையும் பலப்படுத்துதல் அவசியமாகும். கருத்திட்ட முன்னுரிமைகளை அடையாளம்காணல், தாமதங்களை நீக்குதல் மற்றும் அப்போதைக்குள்ள வளங்களை சிறந்த விதத்தில் பகிர்ந்தளிப்பதற்கு உதவியாயமையக்கூடியவாறு பலம்பொருந்திய அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் கண்காணிப்புச் செயன்முறையொன்று நிறுவப்படல் வேண்டும். நடுத்தர கால ரீதியில், உயர் வளர்ச்சிப் பாதையொன்றை நோக்கிச் செல்கின்ற அதேவேளை, விலை உறுதிப்பாட்டைப் பேணிவருதல் பிரதானமானதொரு சவாலாக இருக்கும். இதன் பிரகாரம், பொருளாதாரம் மீட்சியடைவதைத் தொடர்ந்து உருவாகக்கூடிய பணவீக்க ரீதியிலான தாக்கங்களைத் தவிர்ப்பதற்கு தற்போதுள்ள விரிவடைந்துசெல்லும் அரச நிதியியல் மற்றும் நாணயக் கொள்கைகளிலிருந்து படிப்படியா கவும் கவனமாகவும் நீங்குகின்ற தேவையை அடையாளம் காண்பதும் மிக முக்கியமாகும்.

## 2009 ஆம் ஆண்டில் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள், உறுதிப்பாடு மற்றும் கொள்கை பதிலிறுப்புகள்

### உண்மைத்துறை அபிவிருத்திகள்


உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சவால்கள் பலவற்றுக்கும் மத்தியில் இலங்கையின் பொருளாதாரம் 2009 ஆம் ஆண்டில் உண்மை ரீதியில் 3.5 சதவீதம் வளர்ச்சியடைந்தது. ஆண்டின் முதலாவது காலாண்டில் 1.6 சதவீத குறைந்த வளர்ச்சியிலிருந்து நான்காம் காலாண்டளவில் 6.2 சதவீத கவர்ச்சியானதொரு வளர்ச்சியை அடையப்பெற்றதன் மூலம் பொருளாதாரம் விரைவாக மீட்சியடைந்தது.

2009 ஆம் ஆண்டில் பொருளாதாரத்தின் அனைத்து பிரதானமான துறைகளும் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன.

தேயிலை மற்றும் நெல் உற்பத்தி குறைவடைந் தமையினால் வேளாண்மைத்துறை 2008 ஆம் ஆண்டு நிலவிய 7.5 சதவீத உயர் வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் 3.2 சதவீத குறைந்த வளர்ச்சியை பதிவு செய்தது. எவ்வாறாயினும், வேளாண்மைத்துறையின் துணைத்துறையொன்றான மீன்பிடிக் கைத்தொழில் தொடர்பில் வலுவிலிருந்த பாதுகாப்பு வரையறைகள் தளர்த்தப்பட்டமையைத் தொடர்ந்து கரையோர மீன்பிடிக் கைத்தொழிலில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக 6.9 சதவீத வளர்ச்சியை பதிவு செய்வதற்கு மீன்பிடித் துறைக்கு முடியுமாயிருந்தது. கைத்தொழில்துறை மந்தகதியில் வளர்ச்சியடைந்தது. 2008 இல் பதிவு செய்யப்பட்ட 5.9 சதவீத வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் இத்துறை 2009 ஆம் ஆண்டினுள் 4.2 சதவீதத்தினாலேயே வளர்ச்சியடைந்தது. பன்னாட்டு மற்றும் உள்நாட்டுச் சந்தையில் கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் தாக்கத்தினால் கைத்தொழில்துறைக்கு உரியதான மின்வலு, எரிவாயு, நீர் ஆகியவை தவிர்ந்த ஏனைய அனைத்து துணைத்துறைகளும் முன்னைய ஆண்டுக்கு ஒப்பீட்டளவில் குறைந்த வளர்ச்சியை பதிவு செய்தன. ஒட்டுமொத்தமான பொருளாதார வளர்ச்சிக்கு 55 சதவீத பங்களிப்பை வழங்கி பணிகள்துறை 2009 ஆம் ஆண்டில் 3.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. பணிகள்துறைக்கு மிக அதிகளவு பங்களிப்பை வழங்குகின்ற மொத்த மற்றும் சில்லறை வியாபார துணைத்துறையானது பிரதானமாக ஏற்றுமதி இறக்குமதியில் உருவாகிய சுருக்கத்தை பிரதிபலிக்கின்ற வகையில் மந்தகதியிலான செயலாற்றுகையைக் காட்டியது. தொலைத்தொடர்புச் சேவைகள் மற்றும் பண்டங்கள் ஏற்றிச் செல்லல் தொழிற்பாடுகளின் குறைந்தளவு வளர்ச்சியின் காரணமாக போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் துணைத் துறையிலும் குறிப்பிடத்தக்களவு குறைந்த வளர்ச்சி காணப் பட்டது. உள்நாட்டுப் பொருளாதாரச் செயலாற்றுகைகளின் பின்னடைவின் காரணமாக தொழிலின்மை விகிதம் (வட மாகாணம் தவிர்ந்த) 2008 இல் நிலவிய 5.4 சதவீதத்திலிருந்து 2009 இல் 5.8 சதவீதம் வரை அதிகரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வேளாண்மைத்துறை

2009 ஆம் ஆண்டில் வேளாண்மைத்துறையின் குறைந்தளவு வளர்ச்சிக்கு பல்வேறு காரணிகள் ஏதுவாயமைந்தன. ஆண்டின் ஆரம்ப காலத்தில் தேயிலைப் பயிர்ச்செய்கை மாவட்டங்களில் உருவாகிய வரட்சி தேயிலைப் பயிர்ச்செய்கையை பாதிப்படையச் செய்ததோடு, பருவப்பெயர்ச்சி மழை உரிய விதத்தில் கிடைக்காமையால் சிறு போகத்தின் நெற் பயிர்ச்செய்கை பெருமளவு பின்னடைவுக்குள்ளாகியது. பிரதானமாக, கடந்த ஆண்டு நிலவிய சீரற்ற காலநிலையின் தாக்கத்தினால் 2009 ஆம் ஆண்டில் தெங்கு உற்பத்தியும் வீழ்ச்சியடைந்தது. பாதகமான காலநிலையின் காரணமாக கரும்பின் நிரம்பல் வீழ்ச்சியடைந்தமையினால் ஆண்டின் சீனி உற்பத்தியும் குறைவடைந்தது. ஆயினும், 2009 ஆம் ஆண்டில் வேளாண்மைத்துறை நடுத்தர வளர்ச்சியை அடைவதற்கு இறப்பர், சோளம் மற்றும் பெரிய வெங்காயம் ஆகிய ஏனைய களப் பயிர்கள், மீன்பிடி மற்றும் விலங்கு வளர்ப்பு ஆகிய துணைத்துறைகள் சிலவற்றின் சாதகமான செயலாற்றுகை உதவியாயமைந்தது.

வேளாண்மைத்துறைக்கு மிகச் சிறந்த விலைகளின் பிரதிபலன்கள் கிடைத்தன. 2009 ஆம் ஆண்டில் தேயிலை விலைகள் அதிகரித்தமை, தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைந்தமையினால் உருவாகிய தாக்கத்தைக் குறைப்பதற்கு உதவியாயிருந்தது. சிறு போகத்தில் நெல் விளைச்சல் வீழ்ச்சியடைந்தமையினால் உருவாகிய பற்றாக்குறையின் காரணமாக நெல் விலைகள் தொடர்ச்சியாக உயர் பெறுமானத்தைக் கொண்டிருந்தன. சுங்க வரியின் ஊடாக பாதுகாப்பு வழங்கப்பட்டமையின் காரணமாக சோளம் மற்றும் தேங்காய் எண்ணெய்க்கு உயர்ந்தளவு விலைகள் கிடைத்தன. உள்நாட்டுப் பால் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் திரவப் பால் உற்பத்தியாளர்களுக்கு சிறந்ததொரு விலையைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தமையால் திரவப் பால் விலைகள் உயர் மட்டத்தில் நிலவின. ஆண்டின் இரண்டாவது பகுதியினுள் விலங்கு உணவு விலைகள் அதிகரித்தமை மற்றும் மிக அதிகளவிலான கேள்வியின் காரணமாக கோழி முட்டை மற்றும் உயிருள்ள விலங்குகளின் பண்ணை விலைகள் மிக உயர் பெறுமானத்தைக் கொண்டிருந்தன.

ஆண்டினுள் வேளாண்மைத்துறையின் வளர்ச்சிக்கு அரசாங்கம் பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டது. உலகளாவிய நிதி நெருக்கடியின் காரணமாக விலை வீழ்ச்சியின் தாக்கத்துக்கு உள்ளாகிய தேயிலைக் கைத்தொழிலாளர்களுக்கு அவர்கள் பெற்ற கடன்களுக்கு வட்டிச் சலுகையொன்று வழங்கப்பட்டதோடு, இறப்பர் பயிர்ச்செய்கையாளர்களுக்காக உத்தரவாத விலை முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. பாம் எண்ணெய் இறக்குமதிக்கான இறக்குமதி வரிகள் அதிகரிக்கப்பட்டமை தேங்காய் எண்ணெய்க் கைத்தொழிலுக்கு ஊக்குவிப்பாக அமைந்தது. நெற் பயிர்ச்செய்கைத்துறை மற்றும் சிறிய தேயிலைத் தோட்டத்துறைக்கு உரத்தை மானிய விலையில் வழங்குகின்ற நிகழ்ச்சித் திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டது. பயங்கரவாத அச்சுறுத்தல்கள் நிலவிய பிரதேசங்களின் மீன்பிடி மற்றும் பால் உற்பத்தித்துறையை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. அத்துடன் உள்நாட்டுச் சீனி உற்பத்தியை அதிகரிக்கின்ற நோக்கத்துடன் தற்போது இயங்கா நிலையிலுள்ள ஹிங்குரான மற்றும் கந்தளாய் சீனித் தொழிற்சாலைகளை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## கைத்தொழில்துறை

கைத்தொழில்துறையின் உற்பத்தியில் 2008 ஆம் ஆண்டில் நிலவிய 5.9 சதவீத வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் 2009 ஆம் ஆண்டின் வளர்ச்சி 4.2 சதவீதமாக இருந்தது. 2009 ஆம் ஆண்டில் கைத்தொழில் துறையின் தயாரிப்புகளுக்கு 55 சதவீதத்தை விட அதிகளவு பங்களிப்பை வழங்கிய தொழிற்சாலை உற்பத்தித்துறையின் தயாரிப்புகள் மந்தகதி அடைந்தமை இதற்குப் பிரதானமான ஏதுவாயமைந்தது. 2009 ஆம் ஆண்டில் புடவைகள், ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள், இறப்பர் உற்பத்திகள் அத்துடன் ஏற்றுமதிச் சந்தை அடிப்படையிலான ஏனைய உற்பத்திகளின் வெளியீடுகள் குறைந்த வளர்ச்சியைப் பதிவு செய்தன. எவ்வாறாயினும், புடவைகள், ஆடைகள் மற்றும் தோல் உற்பத்தித் துறைகளின் பிரதானமான வழங்குனர்களால் தரத்திலும் பெறுமதியிலும் கூடிய தயாரிப்புகள் வழங்கப்பட்டமையின் மூலம் அவர்களது போட்டி நிலை தொடர்ந்து பேணிவரப்பட்டது. ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுச் சந்தைகளிலான குறைந்தளவு கேள்வி அத்துடன் உற்பத்திச் செலவு அதிகரித்தமை ஆகியன சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்தியாளர்களில் தாக்கத்தை ஏற்படுத்தின. செலவிடக்கூடிய வருமானம் குறைந்தளவில் வளர்ச்சியடைந்தமையும் கட்டடவாக்க துணைத்துறையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாற்றுகை மதிந்தகதியில் நடைபெற்றமையும் உள்நாட்டு சந்தையை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களுக்கான கேள்வி குறைவடைவதற்கு பங்களிப்புச் செய்தன.

எவ்வாறாயினும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களில் சந்தையில் பிரவேசிக்க இயலுமானமை மற்றும் ஆண்டின் இரண்டாவது பகுதியில் உள்நாட்டு சுற்றுலாக் கைத்தொழில் உள்ளிட்ட சுற்றுலாக் கைத்தொழிலில் உருவாகிய மலர்ச்சியின் பெறுபேறாக உணவு, பானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகளால் 2009 ஆம் ஆண்டில் அதன் வளர்ச்சிப் போக்கைப் பேணிவர இயலுமாயிருந்தது.

ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுச் சந்தை ஆகிய இரு துறைகளினதும் கேள்வி மீட்சியடைந்தமை மற்றும் நிறுவன ஒத்துழைப்புக் கிடைத்தமையைத் தொடர்ந்து தொழிற்சாலை உற்பத்தித் துறையின் வெளியீடுகள் சுமுக நிலையை அடைந்தன. உலகளாவிய பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைந்தமை, பணவீக்கமும் வட்டி வீதங்களும் குறைந்த மட்டத்தில் நிலவியமை, நிலையான செலாவணி வீதம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் செயற்படுத்தப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் அத்துடன் வர்த்தகம் மற்றும் வீடமைப்பு நிர்மாணிப்புப் பணிகள் மீட்சியடைந்தமை ஆகியன 2009 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் உற்பத்திக் கைத்தொழில்களின் வளர்ச்சிக்கு உதவியாயமைந்தன. அத்துடன், அரசாங்கத்தினால் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களின் உதவியோடு, கைத்தொழில்கள் முகம்கொடுத்த சவால்களுக்குத் தீர்வாக பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், அரச அனுசரணையுடன் ஊக்குவிப்புகள் வழங்குதல், கைத்தொழில் தளம் பிரதேசமயமாக்கப்படல், உற்பத்தித்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல், அரச-தனியார்துறை கூட்டுமுயற்சிக்கு ஊக்குவிப்பளித்தல், தொழில்நுட்பப் பயன்பாட்டின் மேம்பாடு, மதியுரைச் சேவைகள் மற்றும் நிதி ரீதியிலான ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களைப் பாதுகாத்தல் ஆகியனவும் நடைபெற்றன.

## பணிகள்துறை

பிரதானமாக மொத்த மற்றும் சில்லறை வியாபார துணைத்துறையின் பலவீனமான செயலாற்றுகையின் காரணமாக 2008 ஆம் ஆண்டில் 5.6 சதவீதமாயிருந்த பணிகள்துறையின் வளர்ச்சி 2009 ஆம் ஆண்டில் 3.3 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்தது. சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள், அரச சேவைகள் மற்றும் வீட்டுரிமை ஆகிய துறைகள் தவிர்ந்த ஏனைய துறைகள் முன்னைய ஆண்டுக்கு ஒப்பீட்டளவில் மெதுவான வளர்ச்சியைப் பதிவு செய்தன. உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியின் தாக்கத்தின் முன்னே ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகிய இரண்டு துறைகளிலும் நடைபெற்ற பின்னடைவின் காரணமாக மொத்த மற்றும் சில்லறை வியாபாரத் தொழிற்பாடுகள் சுருங்கின. ஆயினும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொருளாதாரத் தொழிற்பாடுகள் உயர்வடைந்தமையைத் தொடந்து உள்நாட்டு உற்பத்திகள் தொடர்பில் நிலவிய அதிகளவு கேள்வியின் காரணமாக உள்நாட்டு வியாபார துணைத்துறை சிறந்த செயலாற்றுகையைக் காட்டியது. பயங்கரவாதப் பிரச்சினை முடிவுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாத்துறைத் தொழிற்பாடுகள் மிகவும் விரிவடைந்ததன் காரணமாக சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் துணைத்துறையானது 2008 இல் நிலவிய பின்னடைவான நிலைமைக்கு ஒப்பீட்டளவில் விரைவாக மீட்சியடைந்துள்ளது. கடந்த ஆண்டுக்கு ஒப்பீட்டளவில் போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் சேவைகள் துறை சிறிதளவு வேகத்துடன் வளர்ச்சியடைந்தது. அத்துடன், உலக பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தால் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் உருவாகிய மெதுவடைந்த நிலையின் காரணமாக வங்கியியல், காப்புறுதி மற்றும் உண்மைச்சொத்து வியாபார துணைத்துறையானது நடுநிலையான வளர்ச்சியைக் காட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1 வது அட்டவணை

### நிலையான விலைகளில் (2002) கைத்தொழில் மூலங்களின்படி மொத்தத் தேசிய உற்பத்தி

| துறை | பெறுமதி (ரூ. மில்லியன்) | | மொ.உ.உ.பங்கின் % | | வீத மாற்றம் % | | மாற்றத்திற்கான பங்களிப்பு % | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2008 (அ) | 2009 (ஆ) | 2008 (அ) | 2009 (ஆ) | 2008 (அ) | 2009 (ஆ) | 2008 (அ) | 2009 (ஆ) |
| வேளாண்மைத்துறை | 285,897 | 294,921 | 12.1 | 12.0 | 7.5 | 3.2 | 15.1 | 10.8 |
| வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, காட்டுத்தொழில் | 258,881 | 266,033 | 10.9 | 10.9 | 7.3 | 2.8 | 13.2 | 8.5 |
| மீன்பிடித் தொழில் | 27,016 | 28,888 | 1.1 | 1.2 | 9.9 | 6.9 | 1.8 | 2.2 |
| கைத்தொழில்துறை | 672,791 | 701,129 | 28.4 | 28.6 | 5.9 | 4.2 | 28.3 | 33.8 |
| சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 48,090 | 52,030 | 2.0 | 2.1 | 12.8 | 8.2 | 4.1 | 4.7 |
| தயாரிப்பு | 413,681 | 427,334 | 17.5 | 17.4 | 4.9 | 3.3 | 14.6 | 16.3 |
| மின்வலு, எரிவாயு, நீர் | 56,847 | 58,974 | 2.4 | 2.4 | 2.7 | 3.7 | 1.1 | 2.5 |
| கட்டடவாக்கம் | 154,173 | 162,790 | 6.5 | 6.6 | 7.8 | 5.6 | 8.4 | 10.3 |
| பணிகள்துறை | 1,406,813 | 1,453,254 | 59.5 | 59.3 | 5.6 | 3.3 | 56.6 | 55.4 |
| மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் | 571,911 | 570,152 | 24.2 | 23.3 | 4.7 | -0.3 | 19.4 | -2.1 |
| சுற்றுலா விடுதிகளும் உணவகங்களும் | 8,741 | 9,901 | 0.4 | 0.4 | -5.0 | 13.3 | -0.3 | 1.4 |
| போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் | 310,029 | 330,390 | 13.1 | 13.5 | 8.1 | 6.6 | 17.5 | 24.3 |
| வங்கியியல், காப்புறுதி, உண்மைச்சொத்து | 206,048 | 217,819 | 8.7 | 8.9 | 6.6 | 5.7 | 9.5 | 14.0 |
| வதிவிட உரிமை | 73,137 | 74,051 | 3.1 | 3.0 | 1.1 | 1.3 | 0.6 | 1.1 |
| அரச பணிகள் | 181,051 | 191,778 | 7.7 | 7.8 | 5.7 | 5.9 | 7.4 | 12.8 |
| தனியார் பணிகள் | 55,896 | 59,164 | 2.4 | 2.4 | 6.5 | 5.8 | 2.6 | 3.9 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொ.உ.உ.) | 2,365,501 | 2,449,304 | 100.0 | 100.0 | 6.0 | 3.5 | 100.0 | 100.0 |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -56,330 | -28,332 | | | -131.2 | 49.7 | | |
| மொத்த தேசிய உற்பத்தி (மொ.தே.உ.) | 2,309,172 | 2,420,972 | | | 4.6 | 4.8 | | |


(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

## முதலீடுகள்

2009 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த முதலீடுகள் குறைவடைந்தோடு, சேமிப்பு – முதலீட்டு இடைவெளியும் குறைவடைந்தது. தனியார் முதலீடுகள் மொ.உ.உ. யின் சதவீதமாக முன்னைய ஆண்டில் 21.1 சதவீதமாக இருந்ததோடு, இது 2009 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்து 17.9 சதவீதமாக விளங்கியது. அத்துடன், அரச முதலீடுகள் மொ.உ.உ.யில் 6.6 சதவீதம் வரை சிறிதளவு அதிகரித்தது. இதன் பெறுபேறாக, மொத்த முதலீடு 2008 இல் நிலவிய மொ.உ.உ.யின் 27.6 சதவீதத்திலிருந்து 24.5 சதவீதம் வரை குறைவடைந்தது. மேலும், 2008 இல் மொ.உ.உ.யின் 17.8 சதவீதமாக இருந்த தேசிய சேமிப்புகள் 2009 இல் மொ.உ.உ.யின் 23.9 சதவீதம் வரை அதிகரித்தது. சென்மதி நிலுவையில் நடைமுறைக் கணக்கு நிலுவை குறிப்பிடத்தக்களவு சுருங்கியதன் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு 2009 இல் முதலீடுகள் குறைவடைந்தமை மற்றும் உள்நாட்டு சேமிப்புகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமையால் சேமிப்பு – முதலீட்டு இடைவெளியும் மொ.உ.உ.யின் 0.7 சதவீதம் வரை குறைவடைந்தது. 2008 இல் இது மொ.உ.உ.யில் 9.8 சதவீதமாக விளங்கியது.

**8 வது வரைபடம்**
**சேமிப்புக்களும் முதலீடுகளும்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 வது அட்டவணை
## கூட்டுக் கேள்வியும் சேமிப்பு முதலீட்டு இடைவெளியும்

| விடயம் | ரூ. பில்லியன் | | வளர்ச்சி | | மொ.உ.உ.யின் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2007(அ) | 2008(ஆ) | 2007(அ) | 2008(ஆ) | 2007(அ) | 2008(ஆ) |
| 1. உள்நாட்டுக் கேள்வி | 5,014.3 | 5,139.0 | 26.9 | 2.5 | 113.7 | 106.5 |
| 1.1 நுகர்வு | 3,799.1 | 3,955.4 | 28.8 | 4.1 | 86.1 | 82.0 |
| தனியார் | 3,085.3 | 3,103.8 | 28.4 | 0.6 | 70.0 | 64.3 |
| அரசு | 713.8 | 851.5 | 30.6 | 19.3 | 16.2 | 17.6 |
| 1.2 முதலீடு (மொத்த உள்நாட்டு மூலங்கள்) | 1,215.2 | 1,183.7 | 21.5 | -2.6 | 27.6 | 24.5 |
| தனியார் | 929.1 | 865.1 | 15.1 | -6.9 | 21.1 | 17.9 |
| அரசு | 286.1 | 318.6 | 48.3 | 11.3 | 6.5 | 6.6 |
| 2. தேறிய வெளிநாட்டுக் கேள்வி | -603.6 | -313.9 | -62.6 | 48.0 | -13.7 | -6.5 |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 1,095.7 | 1,030.9 | 5.2 | -5.9 | 24.8 | 21.4 |
| பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதிகள் | 1,699.3 | 1,344.8 | 20.2 | -20.9 | 38.5 | 27.9 |
| 3. மொத்தக் கேள்வி (மொ.உ.உ.) (1) + (2) | 4,410.7 | 4,825.1 | 23.2 | 9.4 | 100.0 | 100.0 |
| 4. உள்நாட்டுச் சேமிப்புகள் (3) – (1.1) | 611.6 | 869.7 | -2.8 | 42.2 | 13.9 | 18.0 |
| தனியார் | 700.0 | 1,046.7 | 1.9 | 49.5 | 15.9 | 21.7 |
| அரசு | -88.5 | -176.9 | -53.3 | -100.0 | -2.0 | -3.7 |
| 5. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -105.0 | -55.8 | -168.9 | 46.9 | -2.4 | -1.2 |
| 6. தேறிய தனியார் நடைமுறை மாற்றல்கள் | 277.7 | 336.6 | 13.3 | 21.2 | 6.3 | 7.0 |
| 7. தேசிய சேமிப்புகள் (4) + (5) + (6) | 784.3 | 1,150.5 | -6.1 | 46.7 | 17.8 | 23.9 |
| 8. சேமிப்பு முதலீட்டு இடைவெளி | | | | | | |
| உள்நாட்டுச் சேமிப்புகள் - முதலீடு (4) – (1.2) | -603.6 | -313.9 | | | -13.7 | -6.5 |
| தேசிய சேமிப்புகள் - முதலீடு (7) – (1.2) | 431.0 | -33.2 | | | -9.8 | -0.7 |
| 9. அலுவல்சார் கொடைகளற்ற வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை (2) + (5) + (6) | -431.0 | -33.2 | | | -9.8 | -0.7 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி


## வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள்

சவால்மிக்கதான உலகளாவிய பொருளாதார சுற்றாடலின் மத்தியில் வெளிநாட்டுத் துறையானது 2009 ஆம் ஆண்டினுள் பலம்பொருந்தியதாக மீட்சியடைந்தது. குறிப்பாக வெளிநாட்டு முதலீடுகள் பெருமளவில் நாட்டிற்கு வெளியே எடுத்துச் செல்லப்பட்டமை, குறுகிய காலக் கடன்கள் மீள வழங்கப்படாமை, புதிய வர்த்தக ரீதியிலான நிதியிடல்கள் கிடைக்காமை மற்றும் பெற்றோலியத்திற்கு அதிக விலையைச் செலுத்த நேரிட்டமை ஆகியன இவ்வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தன. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிலைமைகளில் நிலவிய சவால்களுக்கு மத்தியில் மொத்த அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகள் 2009 மார்ச் மாத இறுதியளவில் குறைந்தபட்ச மட்டம் வரை வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும் சமாதானம் உருவாகியமை மற்றும் முதலீட்டாளர்களின் நம்பிக்கை வளர்ச்சியடைந்ததைத் தொடர்ந்து ஆண்டின் இறுதியளவில் வெளிநாட்டு ஒதுக்குகள் இதுவரை பதிவு செய்யப்பட்ட உயர் அளவினைப் பதிவு செய்து வெளிநாட்டுத்துறை மீண்டும் பலம்பொருந்தியதாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4 வது வரைபடம்**
**பெற்றோலிய இறக்குமதிகளின் பெறுமதியும் மசகெண்ணெய் இறக்குமதியின் சராசரி விலையும்**




## வெளிநாட்டு வர்த்தகம்

உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக 2009 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வர்த்தகம் வீழ்ச்சியடைந்த போதிலும், ஆண்டின் இறுதிப் பகுதியில் தெளிவாக மீட்சியடைகின்ற அடையாளங்களைக் காணக்கூடியதாயிருந்தது. உலகளாவிய கேள்வி குறைவடைந்ததன் பெறுபேறாக, குறிப்பாக கைத்தொழில் ஏற்றுமதிகள் குறைவடைந்தமையின் காரணமாக 2009 ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருமானம் 12.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்ததோடு, குறிப்பாக எண்ணெய் மற்றும் உர விலைகள் குறைவடைந்தமையால் தொகை மற்றும் விலை ஆகிய இரண்டிலும் குறைவைக் காட்டுகின்ற வகையில் இறக்குமதிச் செலவும் 27.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதன் பிரகாரம், ஏற்றுமதி வருமானம் குறைவடைந்ததற்கு ஒப்பீட்டளவில் இறக்குமதிச் செலவுகளில் பெருமளவு வீழ்ச்சியைக் காட்டுகின்ற வகையில், 2008 ஆம் ஆண்டில் அமெரிக்க டொலர் 5,981 மில்லியன் வரை 63.6 சதவீதத்தால் விரிவடைந்திருந்த வர்த்தக நிலுவைக்கு ஒப்பீட்டளவில் 2009 ஆம் ஆண்டில் வர்த்தக நிலுவை அமெரிக்க டொலர் 3,122 மில்லியன் வரை 47.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், ஆண்டின் இறுதிப் பகுதியில் உலகளாவிய பொருளாதாரம் மீட்சியடைந்தமைக்கான அடையாளங்களைக் காட்டுகின்ற வகையில் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஓரளவு வளர்ச்சியைக் காணக்கூடியதாயிருந்தது. ஆண்டின் நான்காம் காலாண்டில் வேளாண்மை மற்றும் கைத்தொழில் ஏற்றுமதிகள் உயர்ந்தளவு வளர்ச்சியைக் காட்டுகின்ற வகையில் ஏற்றுமதி வருமானம் அதிகரித்தது. அதேபோன்று, ஆண்டின் நான்காம் காலாண்டில் நுகர்வு மற்றும் இடைநிலைப் பண்டங்களின் இறக்குமதி அதிகரித்ததன் மூலம் இறக்குமதிச் செலவுகளும் அதிகரித்தன.

## சென்மதி நிலுவை

சென்மதி நிலுவையின் பணிகள் கணக்கின் வளர்ச்சி 2009 ஆம் ஆண்டின் முதலாவது பகுதியில் மெதுவடைந்திருந்த போதிலும், ஆண்டின் இரண்டாம் பகுதியில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. இதன் பொருட்டு உலகளாவிய பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைந்தமை மற்றும் உள்நாட்டுப் போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து வளர்ச்சியடைந்த சந்தையின் நம்பகத்தன்மை பிரதானமாக பங்களிப்பு வழங்கியது. சிறிதளவிலாயினும், ஆண்டினுள் போக்குவரத்துப் பணிகள், தொலைத் தொடர்புப் பணிகள், கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம், கட்டடவாக்கம் மற்றும் காப்புறுதிப் பணிகள் ஆகிய துறைகளில் மிகை பதிவு செய்யப்பட்டது. ஆண்டின் முதல் ஒருசில மாதங்களினுள் சுற்றுலாப் பயணிகளின் வருகை துரிதமாக வீழ்ச்சியடைந்த போதிலும், உள்நாட்டுப் போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து பிரதானமான சுற்றுலா உருவாக்க நாடுகளால் இதற்கு முன்னர் இலங்கை தொடர்பில் வெளியிடப்பட்டிருந்த பாதகமான சுற்றுலா தொடர்பான அறிவுறுத்தல்கள் நீக்கப்பட்டமையின் காரணமாக ஆண்டின் எஞ்சிய காலத்தினுள் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியைக் காணக்கூடியதாயிருந்தது. அதன் பெறுபேறாக முன்னைய ஆண்டுக்கு ஒப்பீட்டளவில் சுற்றுலாத்துறை வருவாய் 2.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இதன் பிரகாரம் 2009 ஆம் ஆண்டுக்காக பணிகள் கணக்கில் அமெரிக்க டொலர் 391 மில்லியன் மிகை பதிவு செய்யப்பட்டது.

2008 ஆம் ஆண்டில் வருமானக் கணக்கில் அமெரிக்க டொலர் 972 மில்லியன் உயர்ந்தளவு பற்றாக்குறையொன்று பதிவு செய்யப்பட்டிருந்ததோடு, 2009 ஆம் ஆண்டினுள் அமெரிக்க டொலர் 488 மில்லியன் வரை துரிதமாகக் குறைவடைந்தது. ஆண்டினுள் சாதனைமிக்க வகையில் உயர் மட்டம் வரை வளர்ச்சியடைந்த வெளிநாட்டு ஒதுக்குகள் மீது உயர்ந்தளவு வட்டி வருமானம் கிடைத்தமை மற்றும் அமெரிக்க டொலர்களைக் கொண்ட வர்த்தகப் பிணையங்கள் சந்தைப் பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றபோது மதிப்பீட்டு மற்றும் செலாவணி அனுகூலங்கள் கிடைக்கப்பெற்றமை ஆகிய விடயங்கள் இதற்கு பிரதானமாக ஏதுவாயமைந்தன.

வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை குறைவடைந்தமை மற்றும் வெளிநாட்டு தொழில் புரிவோரின் பணவனுப்பல்கள் அதிகரித்தமையின் காரணத்தினால் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கில் பெருமளவு வளர்ச்சியைக் காணக்கூடியதாயிருந்தது. ஆண்டின் முதலாவது காலாண்டினுள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்புரிவோரின் பணவனுப்பல்களில் குறைவைக் காணமுடியுமாயிருந்த போதிலும், 2009 ஆம் ஆண்டுக்காக முழுமொத்தமாக 14.1 சதவீத வளர்ச்சியைக் காட்டுகின்ற வகையில் அது அமெரிக்க டொலர் 3,330 மில்லியன் வரை அதிகரித்தது. ஆண்டின் முதலாவது 9 மாதங்களினுள் நடைமுறைக் கணக்கில் அமெரிக்க டொலர் 339 மில்லியன் மிகை பதிவு செய்யப்பட்ட போதிலும் ஆண்டின் இறுதிக் காலாண்டினுள் வர்த்தக நிலுவை அதிகரித்தமையினால் முழு ஆண்டுக்குமாக அமெரிக்க டொலர் 214 மில்லியன் பற்றாக்குறை பதிவு செய்யப்பட்டது. 2008 ஆம் ஆண்டில் நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை அமெரிக்க டொலர் 3,886 மில்லியனாக விளங்கியது. நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக, 2008 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 9.5 சதவீதத்துக்கு ஒப்பீட்டளவில் 2009 ஆம் ஆண்டில் 0.5 சதவீதம் வரை குறைவடைந்தது.

மூலதன மற்றும் நிதிக் கணக்குக்குக் கிடைத்த வெளிநாட்டு நிதி உட்பாய்ச்சல்கள் ஆண்டின் இரண்டாவது பகுதியினுள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. ஆண்டின் முதலாவது பகுதியில் அரச வெளிநாட்டு நிதிப் பெறுகைகள் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்த போதிலும் பயங்கரவாதப் பிரச்சினை வெற்றிகரமாக முடிவுறுத்தப்பட்டமை மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தினால் துணைநில் ஒழுங்குமுறை வசதிகள் வழங்கப்பட்டமையைத் தொடர்ந்து ஆண்டின் இரண்டாவது பகுதியினுள் அதில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி ஏற்பட்டது. 2009 ஒக்டோபர் மாதத்தில் அமெரிக்க டொலர் 500 மில்லியனாக இருந்த இலங்கையின் இரண்டாவது பன்னாட்டு இறைமை முறிகள் வழங்குதல் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டதோடு, அந்த வழங்கலுக்கு பதின்மூன்று தடவைகளை விட அதிக பங்களிப்புக் கிடைத்தது. இதன் பிரகாரம், ஆண்டினுள் பன்னாட்டு இறைமை முறிகள் வழங்களின் பெறுகைகள் தவிர்ந்த அரசாங்கத்துக்குக் கிடைத்த மொத்த நீண்ட மற்றும் நடுத்தர கால கடன் மூலதனம் அமெரிக்க டொலர் 1,280 மில்லியனாக பதிவு செய்யப்பட்டது. 2008 ஆம் ஆண்டில் இது அமெரிக்க டொலர் 1,059 மில்லியனாக இருந்தது. மேற்படி மொத்தக் கடன் பெறுகைகளின் மூலம் அமெரிக்க டொலர் 673 மில்லியன் (53 சதவீதம்) சலுகை நிபந்தனைகளின் கீழ் கிடைத்ததோடு, அமெரிக்க டொலர் 607 மில்லியன் (47 சதவீதம்) சலுகையல்லாத வர்த்தக அடிப்படையில் கிடைத்தது. வெளிநாட்டுக் கடன்கள் உள்ளிட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2008 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட அதி உயர் பெறுமானமான அமெரிக்க டொலர் 889 மில்லியனிலிருந்து 2009 ஆம் ஆண்டில் அமெரிக்க டொலர் 601 மில்லியன் வரை வீழ்ச்சியடைந்தது.

**5 வது வரைபடம்**
**சென்மதி நிலுவை**




2009 ஆம் ஆண்டின் இரண்டாவது பகுதியில் அரச பிணையங்களில் இடப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. இதன் பொருட்டு முதலீட்டாளர்களிடையே நிலவிய நம்பிக்கை உறுதிசெய்யப்பட்டமை, நிலையான வெளிநாட்டுச் செலாவணி வீதங்கள் மற்றும் பன்னாட்டு வட்டி வீதங்கள் ஒப்பீட்டளவில் குறைந்த மட்டத்தில் நிலவியமை ஏதுவாயமைந்தன. 2009 ஆம் ஆண்டினுள் அரச பிணையங்கள் மீதான தேறிய வெளிநாட்டு முதலீட்டுப் பெறுகைகள் அமெரிக்க டொலர் 1,369 மில்லியனாக விளங்கியதோடு, இதற்கு ஒப்பீட்டளவில் 2008 ஆம் ஆண்டினுள் இது அமெரிக்க டொலர் 213 மில்லியன் தேறிய வெளிநாட்டு முதலீட்டுக் கொடுப்பனவுகளாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள வெளிநாட்டு முதலீடுகள் குறுகிய காலத்தினுள் நீக்கிக்கொள்ளப்படுகின்றதான இடர்நேர்வைத் தவிர்ப்பதற்காகவும் அதன் மூலம் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் எவ்வித அழுத்தமும் ஏற்படாதிருக்கும் பொருட்டும் அவ்வாறான நீக்குதல்களுக்கு வசதி செய்துகொடுக்கும் முகமாக இலங்கை மத்திய வங்கி உண்டியல்கள் மற்றும் முறிகள் மீது கிடைக்கப்பெற்ற அனைத்து வெளிநாட்டு நிதிப் பாய்ச்சல்களையும் உள்ளீர்த்துக்கொண்டது.

தனியார்துறைக்கான வெளிநாட்டுக் கடன் பெறுகைகள் 2009 ஆம் ஆண்டில் அமெரிக்க டொலர் 390 மில்லியன் வரை 47 சதவீதத்தால் அதிகரித்தது. வெளிநாட்டுக் கடன்களின் மூலம் நிதியிடப்பட்ட வெளிநாட்டுத்துறையின் முதலீடுகள் பிரதானமாக தொலைத்தொடர்பு, மின்வலு மற்றும் சக்தி, விமானப் பணிகள் ஆகிய துறைகள் மீதே இடப்பட்டன. ஆண்டின் இரண்டாவது பகுதியில் கொழும்புப் பங்குப் பரிமாற்றத்திற்கு அதிகளவு வெளிநாட்டு முதலீடுகள் கிடைத்த போதிலும், 2009 ஆம் ஆண்டினுள் கிடைக்கப்பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறான முதலீட்டுப் பெறுகைகள் 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது.

2008 ஆம் ஆண்டில் சென்மதி நிலுவையில் பதிவு செய்யப்பட்ட அமெரிக்க டொலர் 1,385 மில்லியன் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகின்றபோது முழுமொத்த நிலுவை 2009 ஆம் ஆண்டில் அமெரிக்க டொலர் 2,725 மில்லியனாக, இதுவரை பதிவு செய்யப்பட்ட மிக உயர்ந்தளவு மிகையாகப் பதிவு செய்யப்பட்டது. 2009 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டின்போது சென்மதி நிலுவையின் பற்றாக்குறை அமெரிக்க டொலர் 688 மில்லியனாக விளங்கியது. எவ்வாறாயினும், அமெரிக்க டொலர் 200 மில்லியன் வெளிநாட்டுச் செலாவணிப் பரிமாற்ற உடன்படிக்கையொன்றை மேற்கொள்ளல், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டுத் தொழில் புரிவோர்களுக்கு மத்தியில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளில் முதலீடு செய்வதை மேம்படுத்துகின்ற நிகழ்ச்சித் திட்டமொன்று அமுலாக்கப்படல், வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (NRFC) மற்றும் வதிவுடையோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (RFC) மீது ஈட்டப்படுகின்ற வட்டி மீது 20 சதவீத மிகை வட்டி ரூபாய்களின் மூலம் செலுத்தப்படல் ஆகிய மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக இரண்டாவது காலாண்டிலிருந்து வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்களை வளர்ச்சியடையச் செய்கின்ற வகையில் சென்மதி நிலுவை மிகையொன்றைப் பதிவு செய்தது. நீண்ட காலம் நிலவிய பயங்கரவாதப் பிரச்சினை முடிவுறுத்தப்பட்டமை மற்றும் பன்னாட்டு நாணய நிதியம் சென்மதி நிலுவை உதவியாக சிறப்பு எடுப்பனவு உரிமைகள் (சி.எ.உ.) 1.65 பில்லியன் (அமெரிக்க டொலர் 2.6 பில்லியன்) துணைநில் ஒழுங்குமுறை வசதியை அங்கீகரித்தமை மூலம் மேற்படி நிலைமை மேலும் வலுவூட்டப்பட்டது. மேற்படி வசதியுடன் தொடர்புடைய அமெரிக்க டொலர் 652 மில்லியனான முதலாவது தவணைத் தொகைகள் இரண்டும் கிடைக்கப்பெற்றமை மற்றும் அமெரிக்க டொலர் 508 மில்லியன் சி.எ.உ. ஒதுக்குகள் கிடைக்கப்பெற்றமை ஆண்டின் இரண்டாவது பகுதியில் நடைபெற்றது. இதன் பிரகாரம், ஆசிய தீர்ப்பனவு சங்கத்தின் பெறுகைகள் அற்ற அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகள், 2008 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட அமெரிக்க டொலர் 1,594 மில்லியனுக்கு ஒப்பீட்டளவில் 2009 திசெம்பர் மாத இறுதியாகின்றபோது அமெரிக்க டொலர் 5,097 மில்லியன் வரை, இதுவரை பதிவு செய்யப்பட்ட அதிகூடிய பெறுமானம் வரை வளர்ச்சியடைந்தது. இது 2008 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 1.4 மாத இறக்குமதிகளுக்கு ஒப்பீட்டளவில் 6 மாத இறக்குமதிகளை உள்ளடக்கப் போதியதாயிருந்தது.

இலங்கையின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் தொகை மொ.உ.உ. யின் சதவீதமாக 2008 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 37.1 சதவீதத்திற்கு ஒப்பீட்டளவில் 2009 ஆம் ஆண்டில் 44.5 சதவீதம் வரை வளர்ச்சியடைந்தது. அரச திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளுக்கான பெறுகைகள், அரச இறைமை முறிகள் வழங்கப்பட்டமை அதேபோன்று பன்னாட்டு நாணய நிதியத்தின் துணைநில் ஒழுங்குமுறை வசதிகளின் கீழ் இதுவரை கிடைத்த கடன் தவணைத் தொகைகள் சார்பாக நாட்டிற்கு வெளிநாட்டு நாணயம் கிடைக்கப்பெற்றமை மற்றும் பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மெதுவான வளர்ச்சி ஆகியன இவ்வாறு வெளிநாட்டுக் கடன் சதவீதம் அதிகரிப்பதற்குக் காரணமாயமைந்தது. நடுத்தரகால மற்றும் நீண்ட காலக் கடன்களில் 88.5 சதவீதம் அரசதுறையின் கடன்களாயிருந்ததோடு, எஞ்சியவை தனியார்துறை, அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடன்களை உள்ளடக்கியிருந்தன. வெளிநாட்டுக் கடன் தவணைத் தொகைகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் பண்டங்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதியின் சதவீதமாக 2008 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 15.1 சதவீதத்துடன் ஒப்பிடுகின்றபோது 2009 ஆம் ஆண்டில் 19.0 சதவீதம் வரை வளர்ச்சியடைந்தது. அமெரிக்க டொலர் 225 மில்லியனான கூட்டுக் கடன்கள் மீளச் செலுத்தப்பட்டமையின் காரணமாக கடன் பணிக் கொடுப்பனவுகள் அதிகரித்ததோடு, ஆண்டினுள் வர்த்தகப் பண்டங்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதி வருவாய் குறைவடைந்தமையின் காரணமாக வெளிநாட்டுக் கடன் பணிக் கொடுப்பனவுகள் வீதம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.

2009 ஆம் ஆண்டினுள் வெளிநாட்டுச் செலாவணிக் கொள்கையானது, உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் உறுதிப்பாட்டைப் பேணிவருவதில் கவனம் செலுத்தியது. 2009 ஆம் ஆண்டின் முதல் 4 மாத காலத்தினுள் நாட்டிலிருந்து வெளிப்பாய்ச்சப்பட்ட வெளிநாட்டுச் செலாவணித் தொகை அதிகரித்தமையின் காரணமாக செலாவணி வீதம் மதிப்பிறக்கமடைகின்ற போக்கைக் காட்டியது. செலாவணி வீதத்திலான அதிகளவிலான தளம்பல்களைத் தவிர்ப்பதற்கு மத்திய வங்கியினால் தேறிய ரீதியில் சந்தைக்கு வெளிநாட்டுச் செலாவணி வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், 2009 மே மாதத்திலிருந்து நாட்டிற்கான வெளிநாட்டுச் செலாவணிப் பெறுகைகள் அதிகரித்ததோடு, அதன் மூலம் செலாவணி வீதம் மதிப்பேற்றம் அடைகின்ற போக்கைக் காட்டியது. இக்காலத்தினுள் தேறிய ரீதியில் வெளிநாட்டுச் செலாவணியை உள்ளீர்த்த மத்திய வங்கி அதன் மூலம் ரூபாய் அமெரிக்க டொலருக்கு எதிராக மேலும் மதிப்பேற்றமடைவது தவிர்க்கப்பட்டதோடு, அதன் மூலம் வெளிநாட்டு ஒதுக்குத் தொகையைப் பலப்படுத்துவதற்கு இயலுமாயிருந்தது. மத்திய வங்கி கவனமாக சந்தையில் பிரவேசித்தமையின் ஊடாக 2009 ஆம் ஆண்டினுள் அநேகமாக நிலையானதொரு செலாவணி வீதத்தைப் பேணிவருவதற்கு இயலுமாயிருந்தது.

## இறைத்துறை அபிவிருத்திகள்

ஏனைய பல நாடுகளைப் போன்றே 2009 இல் இலங்கையிலும் இறைத்துறை கடும் அழுத்தத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 வது அட்டவணை

# வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள்

| விடயம் | ஐ.அ.டொ. மில்லியன் | | வளர்ச்சி |
|---|---|---|---|
| | 2008(அ) | 2009(அ) | % |
| ஏற்றுமதிகள் | 8,111 | 7,085 | -12.6 |
| வேளாண்மை உற்பத்திகள் | 1,855 | 1,690 | -8.9 |
| கைத்தொழில் உற்பத்திகள் | 6,158 | 5,305 | -13.8 |
| கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 98 | 88 | -9.3 |
| ஏனைய ஏற்றுமதிகள் | - | - | - |
| இறக்குமதிகள் | 14,091 | 10,207 | -27.6 |
| நுகர்வுப் பொருட்கள் | 2,560 | 1,972 | -23.0 |
| இடைநிலைப் பொருட்கள் | 8,344 | 5,669 | -32.1 |
| முதலீட்டுப் பொருட்கள் | 3,048 | 2,451 | -20.0 |
| ஏனையவை | 139 | 115 | -17.6 |
| வர்த்தக நிலுவை | -5,981 | -3,122 | -47.8 |
| பணிகள் (தேறிய) | 401 | 391 | -2.5 |
| பெறுகைகள் | 2,004 | 1,892 | -5.6 |
| கொடுப்பனவுகள் | 1,603 | 1,501 | -6.4 |
| வருமானம் (தேறிய) | -972 | -488 | -49.8 |
| பெறுகைகள் | -32 | 116 | -462.5 |
| கொடுப்பனவுகள் | 940 | 603 | -35.9 |
| நடைமுறை மாற்றல்கள் (தேறிய) | 2,666 | 3,005 | 12.7 |
| தனியார் பணவனுப்பல் (தேறிய) | 2,565 | 2,927 | 14.1 |
| பெறுகைகள் | 2,918 | 3,330 | 14.1 |
| கொடுப்பனவுகள் | 353 | 403 | 14.2 |
| அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய) | 101 | 77 | -23.8 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | -3,886 | -214 | -94.5 |
| மூலதனக் கணக்கு | 291 | 233 | -19.9 |
| நிதியியல் கணக்கு | 1,483 | 2,361 | 59.2 |
| நேரடி முதலீடு (தேறிய) | 691 | 384 | -47.4 |
| உட்பாய்ச்சல்கள் | 752 | 404 | -46.3 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 62 | 20 | -67.6 |
| தனியார் நீண்ட காலம் (தேறிய) | 74 | 79 | 6.8 |
| உட்பாய்ச்சல்கள் | 265 | 390 | 47.2 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 191 | 311 | 62.8 |
| அரசு நீண்ட காலம் (தேறிய) | 252 | 840 | 233.3 |
| உட்பாய்ச்சல்கள் | 1,059 | 1,780 | 68.1 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 807 | 940 | 16.5 |
| அரசு குறுங்காலம் (தேறிய) | -213 | 1,369 | -742.7 |
| தனியார் குறுங்காலம் (தேறிய) | 679 | -311 | -145.8 |
| இதில் பல்வேறு முதலீடுகள் (தேறிய) | 60 | -6 | -110.0 |
| தவறுகளும் விடுபாடுகளும் | 728 | 346 | |
| மொத்த நிலுவை | -1,385 | 2,725 | |
| | | | |
| மொத்த அலுவல்சார் சொத்துகள் | 1,594 | 5,097 | |
| (ஆ.தீ.ஒ. பெறுகைகள் தவிர்ந்த) | 1.4 | 6.0 | |
| மாதத்துக்கான இறக்குமதிகள் | 2,832 | 6,770 | |
| மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் | 2.4 | 8.0 | |
| (ஆ.தீ.ஒ. பெறுகைகள் தவிர்ந்த) | 113.0 | 112.5 | |
| மாதத்துக்கான இறக்குமதிகள் | 136.3 | 109.5 | |
| ஏற்றுமதி விலைச் சுட்டெண் | 82.9 | 102.8 | |
| இறக்குமதி விலைச் சுட்டெண் | | | |
| வர்த்தக வீதம் | | | |
| | | | மிகைஅளவு+\ |
| செலாவணி வீதங்கள் (சராசரி) | | | குறையளவு- |
| ரூ./ஐ.அ.டொ | 108.33 | 114.94 | -5.8 |
| ரூ./யென் | 1.05 | 1.23 | -14.6 |
| ரூ./யூரோ | 159.32 | 160.21 | -0.6 |
| ரூ./ஸ்டேர்லிங் பவுண் | 200.73 | 179.87 | 11.6 |

(அ) திருத்தப்பட்ட
(ஆ) தற்காலிக


மூலம்: இலங்கை மத்திய வங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உள்ளாகியது. வரவு செலவுத்திட்ட இலக்குகள், ஆரம்ப மதிப்பீடுகளிலிருந்து குறிப்பிடத்தக்களவு மாற்றமடைந்தது. 2009 வரவு செலவுத் திட்டத்தின் மூலம், அளிப்புகளின் பின்னர் ஒட்டுமொத்தமான வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.9 சதவீதம் வரை குறைப்பதற்கே எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு ரீதியில் உருவாகிய நிலைமைகளைத் தொடர்ந்து மொ.உ.உ.யின் 7.0 சதவீத ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை இலக்காகக் கொண்டு வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்பட்டன. 2009 ஆம் ஆண்டின் முதற் பகுதியில் உள்நாட்டு பொருளாதாரத் தொழிற்பாடுகள் மெதுவடைந்தமை மற்றும் குறிப்பாக உலகளாவிய பொருளாதார நெருக்கடியின் பாதகமான தாக்கத்தைப் பிரதிபலிக்கின்ற வகையில் இறக்குமதிகள் குறைவடைந்ததமையின் பெறுபேறாக அரசிறை வளர்ச்சி குறைவடைந்தது. அது இறைத் தொழிற்பாடுகளில் கடும் அழுத்தத்தை உருவாக்கியது. அத்துடன், அரசாங்கம் முதலீட்டுத் தொழிற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொண்ட அதேநேரம் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டமை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீள் குடியமர்த்துகை, புனர்வாழ்வளிப்பு மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் துரிதமாக்கப்பட்டமை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் அதிகரித்தமையின் காரணமாக அரச செலவுகள் அதிகரித்தன. 2009 மே மாதம் போர் முடிவடைந்தமையின் சாதகமான நிலைமை மற்றும் உலகளாவிய பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைந்தமையைத் தொடர்ந்து உள்நாட்டுப் பொருளாதாரத் தொழிற்பாடுகள் அதிகரித்தமையின் காரணமாக ஆண்டின் இரண்டாவது பகுதியில் இறைத் தொழிற்பாடுகளுக்கு ஓரளவு நிவாரணம் கிடைத்ததோடு 2009 வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை மொ.உ.உ. யின் 9.8 சதவீதமாகப் பேணிவர முடியுமாயிருந்தது.

**6 வது வரைபடம்**
**அரசிறை, செலவினம் மற்றும் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை**




வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை அதிகரித்தலானது, வருமானம் வீழ்ச்சியடைதல், மீண்டுவரும் செலவினம் மதிப்பீட்டைத் தாண்டிச் செல்லல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிக் கருத்திட்டங்களுக்கான செலவுகள் அதிகரித்தமையின் ஒருங்கிணைந்த பெறுபேறாக விளங்கியது. அரசிறையானது இலக்கிடப்பட்ட வருமானத்தை விட குறிப்பிடத்தக்களவு குறைந்த பெறுமானமாயிருந்தது. மொத்த வருமானம் 2008 மற்றும் 2006 இல் முறையே 14.9 சதவீதமாகவும், 16.3 சதவீதமாகவும் விளங்கியது. அதனோடு ஒப்பிடுகின்றபோது 2009 இல் மொத்த வருமானம் மொ.உ.உ.யில் 14.6 சதவீதம் வரை குறைவடைந்துள்ளது. அத்துடன் மொத்தச் செலவினம் மற்றும் தேறிய கொடுகடன் 2008 இல் மற்றும் 2006 இல் முறையே மொ.உ.உ.யில் 22.6 சதவீதம் மற்றும் 24.3 சதவீதமாக விளங்கியது. 2009 ஆம் ஆண்டில் மொத்தச் செலவினம் மற்றும் தேறிய கொடுகடன் மொ.உ.உ.யில் 24.9 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. மீண்டுவரும் செலவினங்கள் 2008 இல் மொ.உ.உ.யில் 16.9 சதவீதத்திலிருந்து 2009 இல் மொ.உ.உ.யில் 18.2 சதவீதம் வரை குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.

**7வது வரைபடம்**
**அரச படுகடன்**
**(மொ.உ.உ.யின் சதவீதமாக)**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகின்றபோது அரச முதலீடுகள் மொ.உ.உ.யில் 6.0 சதவீதத்திலிருந்து 6.8 சதவீதம் வரை அதிகரித்தது. வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிதியிடும் பொருட்டு 2009 ஆம் ஆண்டின் முதற் பகுதியின்போது உள்நாட்டு மூலங்களைப் பயன்படுத்துவதற்கும், ஆண்டின் இறுதிப் பகுதியின்போது வெளிநாட்டு மூலங்களைப் பயன்படுத்துவதற்கும் அரசாங்கத்திற்கு நேரிட்டது. கடன் தேவை அதிகரித்தமை மற்றும் பன்னாட்டு மூலதனச் சந்தையிலிருந்து பெறுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த வெளிநாட்டு வர்த்தகக் கடன்களைப் பெறுதல் சிரமாயிருந்தமையின் காரணமாக ஆண்டின் முதலாவது பகுதியில் அரசாங்கத்திற்கு உள்நாட்டுக் கடன்கள் மீது தங்கியிருக்க நேரிட்டது. எவ்வாறாயினும் ஆண்டின் இரண்டாவது பகுதியின்போது அரச ரூபாய்ப் பிணையங்களில் வெளிநாட்டு முதலீடுகள் பெருமளவு அதிகரித்தமையின் மூலமும் பன்னாட்டு இறைமை முறிகள் வழங்கப்பட்டமையின் மூலமும் பெறப்பட்ட நிதியங்களிலிருந்து இலங்கை மத்திய வங்கிக்கு உரித்தாயிருந்த திறைசேரி உண்டியல்களில் பெருமளவை செலுத்தித் தீர்க்க இயலுமாயிருந்தது. அதன் பெறுபேறாக வங்கித்துறையிலிருந்து 2009 ஜுலை இறுதியளவில் பெறப்பட்டிருந்த ரூபா 189.6 பில்லியனான மொத்தக் கடன் தொகை, 2009 இறுதியளவில் ரூபா 49 பில்லியன் வரை குறைவடைந்தது. 2009 ஆம் ஆண்டில் மொத்த தேறிய உள்நாட்டுப் படுகடன் தொகை மொ.உ.உ.யில் 5 சதவீதமாக இருந்ததோடு, மொ.உ.உ.யில் 4.8 சதவீதமான தேறிய வெளிநாட்டு நிதியிடல், வெளிநாட்டுக் கடன்கள் (மொ.உ.உ.யில் 1.8 சதவீதம்) மற்றும் அரச பிணையங்களிலான உள்நாட்டு முதலீடுகளை (மொ.உ.உ.யில் 3.0 சதவீதம்) உள்ளடக்கியிருந்தது. அத்துடன் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை அதிகரித்தமை மற்றும் பெயரளவிலான பெறுமதியின் மீதான மொ.உ.உ.யின் வளர்ச்சி குறைவடைந்தமையைக் காட்டுகின்ற வகையில், 2009 ஆம் ஆண்டில் தீர்க்கப்படாதிருந்த பொதுப் படுகடன் தொகை மொ.உ.உ.யில் 86.2 சதவீதம் வரை சிறிதளவு அதிகரித்தது.

## நாணயத்துறை அபிவிருத்திகள்


உள்நாட்டு பொருளாதாரச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் 2009 ஆம் ஆண்டில் மத்திய வங்கி தனது நாணயக் கொள்கை நிலைப்பாட்டை மேலும் தளர்த்தியது. கடந்த ஆண்டுகளில் கடைப்பிடித்த கடுமையான நாணயக் கொள்கை வழிமுறைகள் மற்றும் பன்னாட்டு பண்டங்கள் விலை குறைவடைந்தமையின் காரணமாக பணவீக்கம் துரிதமாக வீழ்ச்சியடைந்தமை, ஆகியன மத்திய வங்கிக்கு தனது நாணயக் கொள்கை நிலைப்பாட்டை தளர்த்துவதற்கு வாய்ப்பேற்படுத்தியது. மத்திய வங்கியிலிருந்து நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகளைப் பெறுகின்ற நிறுவனங்கள் அவ்வசதியைப் பெறமுடியுமான ஆகக்கூடுதலான தவணைகளை தாண்டுகின்றபோது அறவிடப்படுகின்ற அபராத வட்டி வீதம் படிப்படியாகக் குறைக்கப்பட்டது. 2009 மே மாதத்தில் இது நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்திற்கு சமமாக்கப்பட்டது. அத்துடன், மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகளைப் பெறுகின்றபோது நடைமுறையிலிருந்த மட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. அதன் பிரகாரம் கொள்கை வட்டி வீத இடைவெளி மீண்டும் தாபிக்கப்பட்டது. ஆண்டினுள் மத்திய வங்கி கொள்கை வட்டி வீதம் பல கட்டங்களில் குறைக்கப்பட்டது. இதன் பிரகாரம் மீள்கொள்வனவு வீதம் 300 அடிப்படை இலக்கங்களால் 7.50 சதவீதம் வரையிலும், நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் 225 அடிப்படை இலக்கங்களால் 9.75 சதவீதம் வரையிலும் குறைக்கப்பட்டது. இதைத் தவிர, கடனுக்கான கேள்வியை கட்டுப்படுத்துவதற்காக, ஒருசில வாகனத் தொகுதிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட அத்தியாவசியமில்லாத பண்டங்கள் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த குறைந்தபட்ச வைப்புத் தேவையானது கடன் வளர்ச்சிக்கு இடமளிக்கக்கூடிய வகையில் ஆண்டின் முதலாவது பகுதியினுள் நீக்கப்பட்டது.

சந்தைத் திரவத்தன்மை முகாமைத்துவத்தின் பொருட்டு மத்திய வங்கியினால் காலப்பொருத்தமுடைய மற்றும் தகுந்த ஒருசில வழிமுறைகள் பின்பற்றப்பட்டன. ஆண்டின் முதலாவது காலாண்டினுள் தொடர்ந்தும் நாட்டிற்கு வெளியே மூலதனம் எடுத்துச் செய்யப்பட்டமையினால் செலாவணிச் சந்தைக்கு வெளிநாட்டுச் செலாவணியை வழங்குவதற்கு மத்திய வங்கிக்கு நேரிட்டது. இதன் பெறுபேறாக சந்தையில் ரூபாய்த் திரவத்தன்மையில் பற்றாக்குறை உருவாகியது. 2008 இறுதிக் காலாண்டினுள் வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபாய் வைப்புகளுக்குமான நியதிச்சட்ட ஒதுக்குத் தேவை 225 அடிப்படை இலக்கங்களால் குறைக்கப்பட்டதோடு, 2009 பெப்ருவரி மாதத்தில் அது மேலும் 75 அடிப்படை இலக்கங்களால் 7 சதவீதம் வரை குறைக்கப்பட்டு சந்தைக்கு ரூபா 9 பில்லியன் விடுவிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக சந்தைத் திரவத்தன்மையை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு மத்திய வங்கி முதனிலைச் சந்தையிலிருந்து திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்ததோடு, நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களும் நடத்தப்பட்டன. சந்தைப் பங்கேற்பு நிறுவனங்களுக்கு நேர்மாற்று மீள்கொள்வனவு நிரந்தர வசதிகளிலிருந்து நிதியங்கள் பெறப்படுவதன் மீது விதிக்கப்பட்டிருந்த எல்லைகளும் மத்திய வங்கியினால் நீக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**8வது வரைபடம்**
**ஒதுக்குப் பணத்தினதும் விரிந்த பணத்தினதும் வளர்ச்சி**




எவ்வாறாயினும் இதற்கு நேர்மாற்றமானதொரு நிலைமையை 2009 ஜுன் மாதத்திலிருந்து காணக்கூடியதாயிருந்தது. மேலதிக திரவத்தன்மை முகாமைத்துவச் சவாலுக்கு மத்திய வங்கி முகம்கொடுத்தது. உள்ளகப் போர் முடிவடைந்தமை மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தினால் துணைநில் ஒழுங்கு வசதிகள் அங்கீகரிக்கப்பட்டமையின் காரணமாக மீண்டும் முதலீட்டாளர் நம்பிக்கை அதிகரித்தமையினால் 2009 மே மாதத்திலிருந்து அரச பிணையங்களுக்குக் கிடைத்த வெளிநாட்டு முதலீடுகள் மீண்டும் வளர்ச்சியடைந்தன. இவ்வாறு கிடைக்கப்பெற்ற வெளிநாட்டுச் செலாவணியை மத்திய வங்கி கொள்வனவு செய்ததோடு அதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையை உறுதிப்படுத்துவதற்கும் அலுவல்சார் ஒதுக்குகளை அதிகரிக்கச் செய்வதற்கும் இயலுமாயிற்று. இதன் பெறுபேறாக சந்தை ரூபாய்த் திரவத்தன்மை உயர்வடைந்ததோடு, மிகைத் திரவத்தன்மை திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் ஊடாக உள்ளீர்க்கப்பட்டது. இந்நடவடிக்கைகளின் காரணமாக மத்திய வங்கியிடமிருந்த அரச பிணையங்கள் பெருமளவில் குறைவடைந்தன. இதன் காரணமாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்கு மாற்றுக் கருவிகளின் தேவை மேலெழுந்தது. இதன் பிரகாரம் 2009 ஒக்ரோபர் மாதம் முதல் ஒருநாள் மற்றும் தவணை அடிப்படையில் திரவத்தன்மையை உள்ளீர்ப்பதற்கு மத்திய வங்கிப் பிணையங்கள் பயன்படுத்தப்பட்டன. இதைத் தவிர திரவத்தன்மையை உள்ளீர்க்கின்ற இன்னொரு கருவியாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் பொருட்டு வெளிநாட்டுச் செலாவணிப் பரிமாற்ற உடன்படிக்கைகள் மத்திய வங்கியினால் ஆரம்பிக்கப்பட்டன.

2009 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நிதி நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடங்கியிருந்ததும் ‘2009 மற்றும் அதற்கு அப்பாலான நாணய மற்றும் நிதியியல்துறைக் கொள்கை எதிர்கால நோக்கில்’ குறிப்பிடப்பட்டிருந்ததுமான பணக் கூட்டுக்களுக்கான இலக்குகள் குறைக்கப்பட்டன. நியதிச்சட்ட ஒதுக்குத் தேவை குறைக்கப்பட்டமை, பணவீக்கம் துரிதமாக வீழ்ச்சியடைந்தமை மற்றும் உள்நாட்டுப் பொருளாதார செயலாற்றுகை மெதுவடைந்தமை இக்குறைப்புக்கு இடமளித்த பிரதானமான காரணிகளாயிருந்தன. இதன் பிரகாரம் ஆண்டுச் சராசரி ஒதுக்குப் பண வளர்ச்சி இலக்கு 14 சதவீதத்திலிருந்து 13 சதவீதம் வரை குறைக்கப்பட்டது. முக்கியமாக நியதிச்சட்ட ஒதுக்குத் தேவை குறைக்கப்பட்டமையினால் 2009 ஆம் ஆண்டின் முதலாவது 3 காலாண்டுகளினுள் ஒதுக்குப் பணம் குறைவடைந்த போதிலும், மத்திய வங்கியினால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட கடன் அதிகரித்தமை மற்றும் 2008 ஒக்ரோபர் மாதத்தில் நியதிச்சட்ட ஒதுக்குத் தேவை குறைக்கப்பட்டமையின் காரணத்தினால் அப்போதிருந்த தாக்கம் நீங்கியமையினால் இறுதிக் காலாண்டினுள் ஒதுக்குப் பண வளர்ச்சி அதிகரித்தது. இதன்படி, ஒதுக்குப் பணத்தின் சராசரி ஆண்டு வளர்ச்சி 2009 இன் திருத்தப்பட்டவாறான நிதி நிகழ்ச்சித் திட்டத்தின் தயாரிக்கப்பட்ட இலக்குகளினுள் இருந்த அதேவேளை 0.7 சதவீதத்தால் சுருங்கியது. ஆண்டின் முதலாவது பகுதியினுள் குறைந்த வளர்ச்சி வேகத்தையும் இரண்டாவது பகுதியில் அதிக வளர்ச்சி வேகத்தையும் காட்டிய விரிந்த பண நிரம்பல் 13.6 சதவீத ஆண்டுச் சராசரி வளர்ச்சியைக் காட்டியதோடு, 2009 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்டவாறான நிதி நிகழ்ச்சித் திட்டத்தில் தயாரிக்கப்பட்ட இலக்குகளை சிறிதளவு தாண்டிச் சென்றது.


ஆண்டினுள் வங்கி முறைமையில் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் குறைவடைந்தமையின் காரணமாக பணக் கூட்டுக்களின் விரிவாக்கலுக்கு தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பே காரணமாயமைந்தது. 2009 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டினுள் அரச பிணையங்கள் மீதான வெளிநாட்டு முதலீடுகள் நீங்கியமையின் காரணமாக வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அழுத்தத்தைக் குறைக்கும் பொருட்டு மத்திய வங்கி தலையிட்டதால் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்தன. எவ்வாறாயினும் மத்திய வங்கியினால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட தேறிய கடன்கள் அதிகரித்தமையினால் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் அதிகரித்ததன் மூலம் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் குறைவடைதல் அநேகமாக தடுக்கப்பட்டது. எவ்வாறாயினும் இதற்கு நேர்மாற்றமாக 2009 ஏப்பிரல் மாதத்திலிருந்து தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் குறைவடைந்தன. உள்ளகப் போர் முடிவடைந்தமை மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தினால் துணைநில் ஒழுங்கு வசதிகள் அங்கீகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து நாட்டினுள் மீண்டும் வெளிநாட்டுச் செலாவணி பெருமளவில் உட்பாய்ச்சப்பட்டது. அதன் மூலம் மத்திய வங்கி தனது ஒதுக்குகளைக் கட்டியெழுப்பியமை தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரிப்பதற்குக் காரணமாயமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேநேரம், ஒருசில அரச கூட்டுத்தாபனங்கள் வெளிநாட்டுச் செலாவணிக் கடன்களைத் தீர்த்தமை மற்றும் பன்னாட்டு இறைமை முறிகள் கிடைக்கப்பெற்றமையின் மூலம் அரச பொறுப்புகள் ஓரளவுக்குத் தீர்க்கப்பட்டமையினால் வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரித்தன. வங்கித்துறையில் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் குறைவடைவதற்கு ஒருசில காரணிகள் ஏதுவாயமைந்தன. அரச பிணையங்கள் மீது வெளிநாட்டு முதலீடுகள் கிடைத்தமையின் காரணமாக மத்திய வங்கியிடமிருந்த பெருந்தொகைப் பிணையங்கள் பணம் செலுத்தித் தீர்க்கப்பட்டமை, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் உறுதித்தன்மைக்காக மத்திய வங்கி தலையிட்டு ரூபாய்த் திரவத்தன்மையை உள்ளீர்த்தமை ஆகியன மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடைவதற்குக் காரணமாயமைந்த பிரதானமான விடயங்களாயிருந்தன. அநேகமாக உலகளாவிய நிதி நெருக்கடியின் தாக்கத்தின் காரணமாக உள்நாட்டுப் பொருளாதாரச் செயலாற்றுகை மெதுவடைந்தமை, 2008 ஆம் ஆண்டின் இறுதி வரை கடைப்பிடிக்கப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கைகள் மற்றும் கடன் வழங்கலின்போது வங்கிகள் மிகவும் கவனமாயிருந்தமை ஆகியன வர்த்தக வங்கிகளால் தனியார்துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் குறைவடைவதற்குக் காரணமாயமைந்தன. ஆயினும், உள்நாட்டுச் சொத்துக்களின் ஏனைய ஆக்கக்கூறுகளான் அரசாங்கத்துக்கும் அரச கூட்டுத் தாபனங்களுக்கும் வழங்கப்பட்ட கடன்கள் அதிகரித்தன.


**9வது வரைபடம்**
**மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதம் மற்றும் நிறைவேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பண வீதம்**




கொள்கை வட்டி வீத மாற்றம் மற்றும் சந்தைத் திரவத்தன்மை வளர்ச்சியடைந்தமையைத் தொடர்ந்து அனைத்து வட்டி வீதங்களும் வீழ்ச்சியடைந்தன. நாணயக் கொள்கைச் செயலாற்றத்தின் வெற்றிகரத்தன்மையை வளர்ச்சியடையச் செய்கின்ற வகையில் நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பண வீதத்தை கொள்கை வட்டி வீத இடைவெளிக்குள் கொண்டு வருவதற்கு இயலுமாயிருந்தது. இம்மாற்றத்தைத் தொடர்ந்து ஏனைய சந்தை வட்டி வீதங்களும் வீழ்ச்சியடைந்தன. வர்த்தக வங்கிகளின் கடன் வட்டி வீதங்கள் குறைந்த வேகத்திலேயே மாற்றமடைந்தன. முதிர்ச்சிக் காலம் அனைத்துக்கும் ஏற்புடையதான திறைசேரி உண்டியல்கள் விளைவு வீதம் மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீத மாற்றத்திற்கும் முதலீட்டு நிலைமைகளின் வளர்ச்சிக்கும் மிக விரைவாகவே பிரதிபலிப்புக் காட்டின. இது அரச பிணையங்கள் விளைவு வளையியின் மூலமும் பிரதிபலிக்கப்பட்டதோடு, அது கீழ் நோக்கி இடம்பெயர்ந்தும், நீண்டகால முதிர்ச்சிக் காலத்துடன்கூடிய உண்டியல்கள் வீதம் வரை நீண்டு செல்வதையும் காணக்கூடியதாயிருந்தது.

மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைப்பாடு பயனுறுதியான விதத்தில் தொடர்பூட்டப்பட்டதன் ஊடாக சந்தை எதிர்பார்ப்புகளுடன் வங்கியின் கொள்கை நிலைப்பாட்டு ஒத்திசைவாக்கலை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியுமாயிருந்தது. தமது கொள்கை வழிமுறைகளின் வினைத்திறனை விஸ்தரிக்கின்ற நோக்கத்துடன் ஆண்டின் ஆரம்பத்தில் 2009 மற்றும் அதற்கு அப்பால் ‘நாணய மற்றும் நிதியியல்துறைக் கொள்கை எதிர்கால நோக்கு’ வெளியிடப்பட்டது. தனது கொள்கை வழிமுறைகள் மற்றும் அதற்கு அடிப்படையாயமைந்த விடயங்களை விளக்கி, தனது நாணயக் கொள்கைத் தீர்மானங்கள், நாணயக் கொள்கை வெளியீடுகளின் ஊடாக தொடர்ந்து தொடர்பூட்டல் செய்யப்பட்டது. நாணயக் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு உதவியாயிருக்கக்கூடிய வகையில், தனியார்துறை பிரதிநிதிகள் உள்ளடங்கிய நாணயக் கொள்கை மதியுரைக் குழுவின் கருத்துக்கள் தொடர்ந்தும் பெறப்பட்டன.

**9வது வரைபடம்**
**சந்தை வட்டி வீதம்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதியியல் முறைமை உறுதிப்பாடு

சவால்மிக்க சந்தை நிலைமைகளுக்கு மத்தியில்கூட, அவற்றிற்கு வெற்றிகரமாக முகம்கொடுத்து 2009 ஆம் ஆண்டினுள் நிதியியல் முறைமை உறுதிப்பாடு பேணிவரப்பட்டது. உலகளாவிய நிதி நெருக்கடியின் பாதகமான தாக்கங்கள் உள்நாட்டு வர்த்தகச் செயலாற்றுகையிலும் தாக்கத்தை ஏற்படுத்தின. உள்நாட்டுப் பொருளாதாரத்தில் கேள்வி குறைவடைந்தமையின் காரணமாக உருவாகிய பாதகமான நிலைமைகளுக்கு முகம்கொடுப்பதற்கு நிதியியல்துறை நிறுவனங்களுக்கு நேரிட்டது. உலகளாவிய நிதி நெருக்கடி தீவிரமடைந்தமை மற்றும் உலகளாவிய பொருளாதாரச் செயலாற்றுகை சுருங்கியமையின் பெறுபேறாக அரச பிணையங்களிலான வெளிநாட்டு முதலீடுகள் மீளப் பெறப்பட்டமையினால் பணச் சந்தையில் திரவத்தன்மைப் பற்றாக்குறையொன்று உருவாகியது. எவ்வாறாயினும், 2009 மே மாதத்தில் உள்ளகப் போர் முடிவுற்றமையினால் இந்த நிலைமை முற்றாக மாற்றமடைந்து பணச் சந்தைத் திரவத்தன்மை அதிகரித்தது. செலிங்கோ தொழில் முயற்சிகள் குழுமத்தின் வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளுடன் தொடர்புடைய ஒருசில நிறுவனங்கள் முதலீட்டாளர் நம்பிக்கை குன்றுதல் மற்றும் திரவத்தன்மைப் பிரச்சினைக்கு முகம்கொடுத்தமையைத் தொடர்ந்து, அது நிதியியல் மற்றும் தவணைக் குத்தகைத்துறையில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

எவ்வாறாயினும், அரசாங்கமும் மத்திய வங்கியும் சேர்ந்து மேற்கொண்ட உரிய நடவடிக்கைகள் மக்கள் நம்பகத்தன்மையை உறுதிசெய்வதற்கும், நிதியியல் துறையின் உறுதிப்பாட்டைத் தொடர்ச்சியாகப் பேணிவருவதற்கும் உதவியாயமைந்தது. செலிங்கோ தொழில் முயற்சிகள் குழுமத்தின் ஒரு நிறுவனமாகவும் நிதியியல் முறைமையில் முறைமை ரீதியில் முக்கியமான உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகவும் விளங்கிய செலான் வங்கி முகம்கொடுத்த திரவத்தன்மைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மத்திய வங்கி மேற்கொண்ட வழிமுறைகள் வெற்றியளித்தன. புதிய பங்கு வெளியீட்டின் மூலம் செலான் வங்கி மீள்-மூலதனமாக்கலுக்கு உள்ளாக்கப்பட்டதோடு, தற்போது அது வழமையான விதத்தில் தொழில்துறை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. செலிங்கோ தொழில் முயற்சிகள் குழுமத்தில் பாதிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த தவணைக் குத்தகைக் கம்பனிகளின் திரவத்தன்மைப் பற்றாக்குறைக்குத் தீர்வாக மத்திய வங்கி முகாமைத்துவப் பிரதிநிதிகளை நியமித்ததோடு, மீண்டும் மீட்சியடைகின்ற செயற்பாட்டுக்கு வழிகாட்டுவதற்கும் அறிவுரை வழங்குவதற்குமாக மத்திய வங்கியினால் நிபுணத்துவ அறிவுள்ள குழுவொன்றின் சேவை பெறப்பட்டது. மேலும், மத்திய வங்கி நிதி திட்டமிடல் அமைச்சுடன் சேர்ந்து திரவத்தன்மைப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்த பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு உதவியாயிருக்கும் பொருட்டு விசேட உதவி வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்தியது. இதற்கு மேலதிகமாக கிடைக்கவுள்ள தவணைக் குத்தகைத் தொகைகளை காப்பீடு செய்தல் உள்ளடங்கிய பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் சிறப்பியல்புவாய்ந்த தவணைக் குத்தகைக் கம்பனிகளுக்கு வழங்குகின்ற வங்கிக் கடன்களை அத்தாட்சிப்படுத்துகின்ற திட்டமொன்றையும் மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது.

நிதியியல்துறையின் பலத்தையும் தாக்குப்பிடிக்கும் ஆற்றலையும் மேம்படுத்துவதற்கு 2009 ஆம் ஆண்டில் நிதியியல் துறையின் ஒழுங்குமுறையாக்கல் மற்றும் மேற்பார்வை கட்டமைப்பை மேலும் முன்னேற்றுவதற்கு மத்திய வங்கியினால் ஒருசில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. உத்தேச நிதியியல் தொழில்முயற்சிகள் ஒழுங்குமுறையாக்கல் சட்டத்தின் மூலம், நிதியியல் தொழில்முயற்சித் தொழிற்பாடுகள், அதேபோன்று வைப்புகளை ஏற்கின்ற தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்ற நிறுவனங்களின் ஒழுங்குமுறையாக்கல் மற்றும் மேற்பார்வையின் பொருட்டு தற்போதுள்ள சட்டங்களில் காணக்கூடிய சில குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும். வங்கிகள் பலவற்றை ஒன்றிணைத்து மேற்பார்வை செய்தல், வங்கிகளை ஒன்றிணைத்தல் மற்றும் பொறுப்பேற்றல் அத்துடன் ஒழுங்குமுறையாக்கல் கட்டமைப்பை பலப்படுத்துகின்ற தற்போதுள்ள வங்கித் தொழில் சட்டமும் திருத்தப்படும். மேலும், காப்புறுதித் துறையின் ஒழுங்குமுறையாக்கலை விரிவாக்கவும் பலப்படுத்தவும் காப்புறுதித்துறை ஒழுங்குமுறையாக்கல் சட்டத்திற்கு திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. இதைத் தவிர, முதனிலை வணிகர்களுக்கு தமது தொழிற்துறை நடவடிக்கைகளை பல்வகைப்படுத்துவதற்கு வாய்ப்பேற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு ஒருசில ஒழுங்குமுறையாக்கல்கள் வெளியிடப்பட்டன. இதன் பிரகாரம் ஆரம்பச் சந்தர்ப்பத்தில் கட்டணம் அறவிட்டு வழங்கக்கூடியதான சேவைகளை வழங்குவதற்கும், தனது நிறுவனக் குழுமங்களின் பங்குகளிலும் தொகுதிக் கடன்களிலும் முதலீடு செய்வதற்கு அனுமதி வழங்குவதற்கும், பின்னர் பங்குப் பரிமாற்றத்தில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் பங்குகள், தொகுதிக் கடன்கள், முறிகள் மற்றும் வர்த்தப் பத்திரங்களில் முதலீடு செய்வதற்கான அனுமதியை வழங்குவதற்கும் இயலுமான வகையில் மேற்படி ஒழுங்குமுறையாக்கல்கள் வெளியிடப்பட்டன. நுண்பாக நிதியியல் நிறுவனங்களைப் பலப்படுத்துவதற்கும், அவற்றின் கடமைப் பொறுப்புகளை மீள நிறுவுவதற்கும் அதன் மூலம் பொருளாதாரத்திற்கு மேலும் சிறந்ததொரு சேவையை ஆற்றுவதற்கும் இயலுமானவாறு நுண்பாக நிதியியல் நிறுவனங்களின் ஒழுங்குமுறையாக்கல் மற்றும் மேற்பார்வையின் பொருட்டு பல சட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டுப் பொருளாதாரத் தொழிற்பாடுகள் மெதுவடைந்தமையின் சவால்மிக்க நிலைமையின் முன்னேகூட முழுமையாக நோக்குகின்றபோது நிறி நிறுவனங்களின் செயலாற்றுகை சிறந்து விளங்கியது. செயலிழந்த க்டன்கள் அதிகரித்தமையினால் வங்கிகள் கடன் வழங்குகின்றபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் கவனமாகச் செயற்பட்டன. பொருளாதாரச் செயலாற்றுகை மெதுவடைந்தமையின் காரணமாக கடனுக்கான கேள்வி குறைவடைந்தது. இவ்வாறான விடயங்களுக்கு முன்னேகூட, வங்கித்துறை தனது இலாபகரத்தன்மையைப் பேணிவந்தது. செலிங்கோ கூட்டுத் தொழில்முயற்சியுடன் தொடர்புடைய நிதி மற்றும் தவணைக் குத்தகைக் கம்பனிகள் மீது முதலீட்டாளர்களின் நம்பிக்கை குன்றியமை மற்றும் திரவத்தன்மைப் பிரச்சினைகளின் காரணமாக பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் திரவத்தன்மைப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்தன. இது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், உரிமம்பெற்ற தவணைக் குத்தகைக் கம்பனிகளின் செயலாற்றுகையில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. எவ்வாறாயினும், அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் திரவத்தன்மைப் பிரச்சினைகளுக்கு உள்ளாகிய உரிமம்பெற்ற நிதி நிறுவனங்கள் மற்றும் உரிமம்பெற்ற தவணைக் குத்தகைக் கம்பனிகளுக்கு உதவியளிப்பதற்கு விசேட உதவி வேலைத்திட்டமொன்று முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்நிறுவனங்கள் மீதான மக்கள் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு இயலுமாயிருந்ததோடு, அத்துறைகளின் தொழில்துறை நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டன.

நிறுவன உட்கட்டமைப்பு வசதிகளை விஸ்தரிப்பதற்கும் நிதியிடல் வசதிகளுக்கான வாய்ப்புகளை அதிகரிப்பதற்குமான வசதி ஏற்பாடுகள் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டன. பயங்கரவாதம் முடிவுறுத்தப்பட்டமை மற்றும் முதலீட்டாளர்களுக்கு மத்தியில் நம்பிக்கை மீள அதிகரித்தமையைத் தொடர்ந்து வடக்கு, கிழக்கு மாகாணம் முதற்கொண்டு மேல் மாகாணத்திற்கு வெளியே ஆரம்பிக்கப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்தமை குறிப்பிடத்தக்கதொரு வளர்ச்சியாகும் எனக் கூறலாம். உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் தாபிக்கப்பட்ட 49 புதிய கிளைகளில் 17 கிளைகள் கிழக்கு மாகாணத்தில் தாபிக்கப்பட்டதோடு, 10 கிளைகள் வட மாகாணத்தில் தாபிக்கப்பட்டன. வட மாகாண மக்களின் வாழ்வாதார வழிகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டும் பொருளாதாரத் தொழிற்பாடுகளை மீள ஆரம்பிக்கும் பொருட்டும் விசேட கடன் உதவித் திட்டமொன்று மத்திய வங்கியினால் செயற்படுத்தப்பட்டது. பிரதேச அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு செயற்படுத்தப்பட்டு வந்த மேலும் பல கடன் திட்டங்கள் மூலம் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் ஆகிய துறைகளுக்கு கடன் வழங்குதலை இணைப்பாக்கம் செய்தலும் வசதி ஏற்பாட்டினைச் செய்தலும் நடைபெற்றன.

கொடுப்பனவு முறைமையின் உறுதித்தன்மை, பாதுகாப்பு மற்றும் வினைத்திறனை உறுதிசெய்யும் பொருட்டு கொடுப்பனவு முறைமையுடன் தொடர்புடைய இடர்நேர்வுகளைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் மூலம் மத்திய வங்கியினால் ஒழுங்குமுறையாக்கல் கட்டமைப்பு மேலும் பலப்படுத்தப்பட்டது. இதன் பொருட்டு 2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஒழுங்குவிதி 2009 ஜுலை மாதம் 31 ஆம் திகதியிலிருந்து வலுவுக்கு வருகின்றவாறு கொடுப்பனவு அட்டைச் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களுக்கு வெளியிடப்பட்டது. அட்டைகளின் ஊடாக நடைபெறுகின்ற மின்னியல் கொடுப்பனவுகள் மீது நம்பிக்கையைக் கட்டியெழுப்புகின்ற மற்றும் அட்டைகளை மோசடியான விதத்தில் பயன்படுத்துகின்ற இடர்நேர்வைக் குறைக்கும் நோக்கத்துடன் அனைத்து சேவை வழங்குனர்களும் பன்னாட்டு ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தரநியமங்கள் மற்றும் போற்றத்தகு செயற்பாடுகளைக் கடைப்பிடிப்பதை உறுதி செய்கின்ற வகையில் கொடுப்பனவு அட்டைக் கைத்தொழிலின் பாதுகாப்புத் தன்மையை வளர்ச்சியடையச் செய்தல் மேற்படி ஒழுங்குமுறையாக்கலின் குறிக்கோளாகும். ஏதேனுமொரு குறியீட்டின் மூலம் அல்லது வேறேதேனுமொரு விதத்தில் கணக்குக்கு பிரவேசிக்கக்கூடிய கருவிகள் உள்ளடங்கிய பெறுமதி களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள அட்டைகள், அறவீட்டு அட்டைகள், வரவு அட்டைகள் மற்றும் கடன் அட்டைகளுடன் தொடர்புடைய அனைத்துக் கொடுப்பனவு அட்டைச் சேவை வழங்குனர்களும் தமது அலுவல்களில் ஈடுபடும் பொருட்டு மத்திய வங்கியிலிருந்து உரிமப் பத்திரமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

## உலகளாவிய பொருளாதார சூழலும் தோற்றப்பாடும்[1]

2009 ஆம் ஆண்டில் உலகின் அநேகமான பொருளாதாரங்கள் தொடர்ந்தும் உலகளாவிய நிதியியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகின. மேற்படி தீவிரமான பொருளாதாரப் பின்னடைவுக்குப் பிரதிபலிப்புக் காட்டுகின்ற வகையில், ஒட்டுமொத்தக் கேள்வியை அதிகரிக்கச் செய்கின்ற மற்றும் நிதிச் சந்தையை உறுதிப்படுத்துகின்ற நோக்கத்துடன், அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்கள் பல்வேறான கொள்கை வழிமுறைகளைக் கடைப்பிடித்தன. மேற்படி வழிமுறைகளில் நாணயக் கொள்கையைத் தளர்த்தல், வரலாற்று ரீதியில் குறைந்த வட்டி வீதங்களைப் பேணிவருதல், முன்னெப்போதும் இல்லாத வகையில் மத்திய வங்கி ஐந்தொகையை விரிவாக்கல் மற்றும் விரிவாக்கப்பட்ட அரசிறைக் கொள்கைகளைக் கடைப்பிடித்தல் ஆகியன உள்ளடங்கியிருந்தன. இவ்வாறான பல கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும், நிதியியல் துறையானது 2009 ஆம் ஆண்டினுள் அதிக காலம் சிரமங்களுக்கு முகம்கொடுத்தது. இது பொருளாதாரத்தின் உண்மைத்துறையிலும் ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தியது. பன்னாட்டு நாணய நிதியத்தின் எறிவுகளுக்கு ஏற்ப உலக

**(Footnotes)**

[1] இப்பகுதியில் காட்டப்பட்டுள்ள பகுப்பாய்வுகள், பன்னாட்டு நாணய நிதியத்தின் உலக பொருளாதார நோக்கு வெளியீட்டின் 2009 ஒக்ரோபர் மற்றும் 2010 சனவரி (இற்றைப்படுத்தப்பட்ட) இதழ்களையும் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிகளின் வெளியீடுகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரம் 2008 ஆம் ஆண்டில் பதிவு செய்த 3.0 சதவீதத்திற்கு ஒப்பீட்டளவில், 2009 ஆம் ஆண்டில் 0.8 சதவீதத்தால் சுருங்கலாம் என மதிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி பொருளாதார வீழ்ச்சிக்கு, உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகளின் பொருளாதாரங்கள் பிரதானமாக ஏதுவாயமைந்ததோடு, அந்நாடுகளிலும் பொருளாதாரப் பின்னடைவு 3.2 சதவீதமாக இருக்குமெனவும் மதிப்பிடப்பட்டிருந்தது. யப்பான், ஐக்கிய இராச்சியம் மற்றும் யூரோ பிராந்திய நாடுகளில் தீவிர பொருளாதாரப் பின்னடைவைக் காணக்கூடியதாயிருந்தது. அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களின் பின்னடைவு, ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் மற்றும் பணிகளில் தங்கியிருக்கின்ற, வளர்ச்சியடைந்துவரும் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. வளர்ச்சியடைந்துவரும் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்கள் 2009 ஆம் ஆண்டில் 2.1 சதவீத வளர்ச்சியை பதிவுசெய்த போதிலும், மேற்படி வளர்ச்சியானது அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களின் பொருளாதாரச் சுருக்கத்தை ஈடுசெய்யும் அளவிற்கு போதியதாயிருக்கவில்லை. அதேநேரம் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு குறைந்த கேள்வி நிலவியமை, தனியார் கம்பனிகளின் வருமானம் குறைவடைந்தமை, பாரிய மிகைக் கொள்ளளவு நிலவியமை, கடன் வசதிகளைப் பெறுவதிலிருந்த சிரமங்கள் ஆகியன காரணமாக 2009 ஆம் ஆண்டினுள் உலகம் பூராவும் தொழிலின்மை வீதம் தீவிரமாக அதிகரித்ததோடு, அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களில் இது அண்ணளவாக 10 சதவீதமாக இருந்தது.

பன்னாட்டு நாணய நிதியத்தின் புதிய எறிவுகளுக்கு அமைய, முக்கியமாக வளர்ச்சியடைந்துவரும் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களின் பொருளாதார வளர்ச்சியின் காரணமாக 2010 ஆம் ஆண்டில் உலகளாவிய பொருளாதார வளர்ச்சி 3.9 சதவீதமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. நுகர்வோர் கேள்வியை அதிகரிக்கச் செய்கின்ற நோக்கத்துடன் கடைப்பிடிக்கப்பட்ட நிதிக் கொள்கைகள் மற்றும் அரச சலுகை வழங்கும் நடவடிக்கைகளின் காரணமாக நுகர்வோர் செலவு படிப்படியாக அதிகரித்து வருகின்றது. இதன் பெறுபேறாக, பன்னாட்டு வர்த்தகம் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2010 ஆம் ஆண்டில் பண்டங்கள் மற்றும் பணிகள் ஆகிய இரண்டு துறைகளினதும் வர்த்தக அளவு 5.8 சதவீதத்தால் வளர்ச்சியடையும் என பன்னாட்டு நாணய நிதியம் எதிர்வுகூறியுள்ளது. மேலும், அபிவிருத்தியடைந்துவரும் மற்றும் வளர்ச்சியடைகின்ற பொருளாாரங்களுக்கு மூலதனப் பாய்ச்சல்கள் கிடைப்பதன் மூலம் அவ்வாறான பொருளாதாரங்களை நோக்கி நடைபெறுகின்ற இறக்குமதிகள் குறிப்பிடத்தக்களவில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்கள் 2010 ஆம் ஆண்டில் அண்ணளவாக 2.1 சதவீதத்தால் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுவதோடு, 2011 ஆம் ஆண்டளவில் இவ்வளர்ச்சி 2.5 சதவீதம் வரை மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மேற்படி வளர்ச்சியானது பிரதானமாக பொருளாதாரத்தின் தயாரிப்புத்துறையின் மீட்சியின் ஊடாகவே எதிர்பார்க்கப்படுகிறது. இதன் பிரகாரம் சில்லறை வியாபாரத்தில் படிப்படியான உறுதிநிலை, நுகர்வோர் நம்பிக்கை மீளக் கட்டியெழுப்பப்படுதல் மற்றும் வீடமைப்புச் சந்தை மீண்டும் மேம்பாடடைதல் ஆகியன எதிர்பார்க்கப்படுகின்றன. ஒருசில அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்கள் மீட்சியடையும் அடையாளங்களைக் காட்டிய போதிலும் ஏனைய நாடுகள் தொடர்ந்தும் பின்னடைவான நிலையிலேயே இருக்கும். அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களின் மீட்சியடைதலானது இதற்கு முன்னர் நிலவிய நிலைமையை விட பலவீனமான மட்டத்தில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்நாடுகளின் உண்மை உற்பத்தி 2011 இன் இறுதிக் காலம் வரை பொருளாதார நெருக்கடிக்கு முன்னர் இருந்த நிலைமையை விட தாழ் மட்டத்தில் இருக்கும். அதேவேளை, ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துக்குரிய நாடுகளில் தொழிலின்மை அண்ணளவாக முறையே 10 சதவீதமாகவும் 12 சதவீதமாகவும் இருக்குமென எதிர்வுகூறப்பட்டுள்ளது. குறுகிய மற்றும் நடுத்தர கால ரீதியில் உலகளாவிய பொருளாதாரம் மீண்டும் மீட்சியடைதலானது வளர்ச்சியடைந்துவரும் பொருளாதாரங்களின் வளர்ச்சியின் மூலம் தொடர்ந்து வழிப்படுத்தப்படும். வளர்ச்சியடைந்துவரும் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்கள் 2010 இல் அண்ணளவாக 6 சதவீதத்தால் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுவதோடு. இது 2011 இல் தொடர்ந்தும் 6.3 சதவீதத்தால் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆசிய பிராந்தியத்தில் அரச தலையீடு விரிவடைகின்றமை மற்றும் பொருளாதாரம் துரிதமாக மீட்சியடைகின்றமையின் காரணமாக ஒட்டுமொத்தக் கேள்வி அதிகரித்தல், உறுதியற்ற தன்மை குறைவடைதல் மற்றும் நிதியியல் சந்தை முறைமையின் இடர்நேர்வு குறைவடைதல் ஆகியன எதிர்பார்க்கப்படுகின்றன.

2009 இல் உலகளாவிய சந்தையில் பண்டங்கள் விலை சடுதியாகக் குறைவடைந்தமை மற்றும் கேள்வி முன்னெப்போதும் இல்லாத அளவில் குறைவைடந்தமை, வளர்ச்சியடைந்துவரும் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களின் முதன்மைப் பணவீக்கம் பெருமளவு வீழ்ச்சியடைவதற்குக் காரணமாயமைந்தது. அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களில் பணவீக்கம் 2008 ஆம் ஆண்டின் 3.4 சதவீதத்திலிருந்து 2009 இல் 0.1 சதவீதம் வரை குறைவடைந்தது. வளர்ச்சியடைந்துவரும் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களில் பணவீக்கம் 2008இன் 9.2 சதவீதத்திலிருந்து 2009 இல் 5.2 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்தது. முதன்மைப் பணவீக்கம் வீழ்ச்சியடைந்த போதிலும், அபிவிருத்தியடைந்த நாடுகளில் மையப் பணவீக்கம் ஒப்பீட்டளவில் உறுதியான மட்டத்தில் நிலவியது. எவ்வாறாயினும், யப்பானில் மையப் பணவீக்கம் பூச்சியத்தை விட வீழ்ச்சியடைந்தமையைக் காணக்கூடியதாயிருந்தது. பொருளாதாரம் மீட்சியடைந்தமை மற்றும் உலகளாவிய கேள்வி படிப்படியாக அதிகரித்தமையின் மூலம் 2010 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டங்கள் விலை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும், பெருமளவிலான கையிருப்புகள் நிலவுகின்றமை மற்றும் மிகைக் கொள்ளளவு நிலவுகின்றமை விலை அதிகரிப்பைத் தணிக்கலாம். வலுசக்திக்கான விலைகளில் அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுகின்றமையால் அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களில் முதன்மைப் பணவீக்கம் 2009 இல் 0.1 சதவீதத்திலிருந்து 2010 இல் 1.3 சதவீதம் வரை உயர்வடையும் என பன்னாட்டு நாணய நிதியம் எதிர்வுகூறியள்ளது. ஒருசில வளர்ச்சியடைந்துவரும் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களுக்கான மூலதனப் பாய்ச்சல்கள் அதிகரிப்பதன் மூலம் ஒட்டுமொத்தக் கேள்வியில் உருவாகக்கூடிய அழுத்தத்தின் காரணமாக 2010 இல் இப் பொருளாதாரங்களில் பணவீக்கம் உயர்வடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

நிதி நிறுவனங்கள் வலுவடைந்துள்ளமையின் மூலம் உலக நிதிச் சந்தை எதிர்பார்க்கப்பட்ட அளவை விட அதிக வேகமாக மீட்சியடைந்துள்ள போதிலும் நிதி நெருக்கடிக்கு முன்னர் நிலவிய மட்டத்தை விட நிதி நிலைமைகளில் சில பிரச்சினைகள் நிலவுவதற்கான வாய்ப்பு உண்டு. வங்கிகள் கடன் வழங்குகின்ற தரநியமங்களில் நிலவிய இறுக்கமான தன்மை குறைவடைந்ததைத் தொடர்ந்து வங்கிகள் தமது மத்திய வங்கிகளால் அவசர சந்தர்ப்பங்களை முன்னிட்டு வழங்கப்படுகின்ற சலுகைகளிலும் அரசினால் வழங்கப்படுகின்ற பிணையிலும் தங்கியிருத்தல் குறைவடைந்துள்ளது. நிதி நெருக்கடி தீவிரமடைந்திருந்தபோது வழங்கப்பட்ட பெருமளவு கடன்கள் அறவிடமுடியாக் கடன்களாகப் பதிவழிக்க நேரிட்டமை மற்றும் எதிர்காலத்தில் எழக்கூடிய மேலும் பல கடன் பதிவழித்தல்களைக் கவனத்திற்கொள்கின்ற போது வங்கிகளுக்கு மீள்-மூலதனமிடல் அவசியமாயுள்ளதால் எதிர்வரும் மாதங்களில் வங்கிக் கடன்கள் குறிப்பிடத்தக்களவு

## 4 வது அட்டவணை

## உலகப் பொருளாதார அபிவிருத்திகளும் தோற்றப்பாடுகளும் (அ)

| விடயம் | உண்மை | | எறிவுகள் | |
|---|---|---|---|---|
| | 2007 | 2008 | 2009 | 2010 |
| உலக வெளியீடு | 5.2 | 3.0 | -0.8 | 3.9 |
| முன்னேற்றம்கண்ட பொருளாதாரங்கள் | 2.7 | 0.5 | -3.2 | 2.1 |
| ஐக்கிய அமெரிக்கா | 2.1 | 0.4 | -2.5 | 2.7 |
| யூரோ பகுதி | 2.7 | 0.6 | -3.9 | 1.0 |
| ஐக்கிய இராச்சியம் | 2.6 | 0.5 | -4.8 | 1.3 |
| யப்பான் | 2.3 | -1.2 | -5.3 | 1.7 |
| அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்கள் | 8.3 | 6.1 | 2.1 | 6.0 |
| அபிவிருத்தியடைந்துவரும் ஆசியா | 10.6 | 7.9 | 6.5 | 8.4 |
| சீனா | 13.0 | 9.6 | 8.7 | 10.0 |
| இந்தியா | 9.4 | 7.3 | 5.6 | 7.7 |
| உலக வர்த்தக அளவு (பொருட்கள் மற்றும் பணிகள்) | 7.3 | 2.8 | -12.3 | 5.8 |
| இறக்குமதிகள் | | | | |
| முன்னேற்றம்கண்ட பொருளாதாரங்கள் | 4.7 | 0.5 | -12.2 | 5.5 |
| அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்கள் | 13.8 | 8.9 | -13.5 | 6.5 |
| ஏற்றுமதிகள் | | | | |
| முன்னேற்றம்கண்ட பொருளாதாரங்கள் | 6.3 | 1.8 | -12.1 | 5.9 |
| அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்கள் | 9.8 | 4.4 | -11.7 | 5.4 |
| விலை அசைவுகள் | | | | |
| நுகர்வோர் விலைகள் | | | | |
| முன்னேற்றம்கண்ட பொருளாதாரங்கள் | 2.2 | 3.4 | 0.1 | 1.3 |
| அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்கள் | 6.4 | 9.2 | 5.2 | 6.2 |
| பண்டங்களின் விலைகள் (அமெரிக்க டொலர்) | | | | |
| எரிபொருள் | 10.7 | 36.4 | -36.1 | 22.6 |
| எரிபொருள் அல்லாதவை | 14.1 | 7.5 | -18.9 | 5.8 |
| **அமெரிக்க டொலர் வைப்புகளின் மீதான ஆறுமாத இலண்டன் வங்கிகளுக்கு இடையிலான வழங்கல் வட்டி வீதம் (சதவீதம்)** | 5.3 | 3.0 | 1.1 | 0.7 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிக்குமென எதிர்பார்க்க முடியாது. தற்போதைய குறைந்த வட்டி வீதம் மற்றும் முதலீட்டாளர்கள் இடர்நேர்வைத் தாங்கிக்கொள்வதற்குள்ள விருப்பம் அதிகரித்துள்ள நிலையில், புதிய முறிகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து கூட்டிணைக்கப்பட்ட முறிகள் சந்தை வளர்ச்சியடைந்த போதிலும், தனியார்துறைக்கு வங்கிகளின் மூலம் வழங்கப்படுகின்ற கடன் தொகையில் ஏற்படுகின்ற குறைவைத் தீர்ப்பதற்கு இவ்வளர்ச்சி போதியதாயிருக்கவில்லை. உயர் விளைவுடன் கூடிய முதலீட்டுச் சந்தைகள் மீளத் திறக்கப்பட்டமைக்கு மத்தியில் பங்குச் சந்தைகள் மீட்சியடைந்துள்ளன. மூலதனச் சந்தையில் பிரவேசித்தல் மட்டுப்பட்டதாயுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் எதிர்வரும் சில ஆண்டுகளினுள் தொடர்ந்தும் நிதி நெருக்கடிகளுக்கு உள்ளாவதற்கான வாய்ப்பு நிலவுகின்றது. இதன் பிரகாரம் இத்துறைகளுக்கு நிதி வசதிகள் கிடைப்பதை உறுதிசெய்யும் பொருட்டு அரச கடன் பிணைத் திட்டமொன்றைப் பேணிவருதல் உதவியாயமையும். அதேவேளை, அநேகமான நாடுகளில் அரசாங்கங்கள் கடைப்பிடிக்கின்ற விரிவாக்க அரசிறைக் கொள்கைகள் மற்றும் அவற்றின் பெறுபேறுகளாக பாரிய அளவிலான அரச வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை நிலவியமை, குறிப்பாக சிறிய நாடுகளின் இறைமைக் கடன்களில் அதிக அழுத்தத்தை ஏற்படுத்தின. வளர்ச்சியடைந்துவரும் பொருளாதாரங்கள் மீட்சியடைந்தமை மற்றும் அப்பொருளாதாரங்களின் சிறந்த எதிர்கால நோக்கின் காரணமாக, அந்நாடுகளின் பல்வேறான முதலீட்டு பெறுகைகள் நெருக்கடிக்கு முன்னர் நிலவிய நிலைமையை அடைந்துள்ளன.

பெரும்பாலான அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்கள் நாணயக் கொள்கைகளைத் தளர்த்தியமையின் பெறுபேறாக 2009 ஆம் ஆண்டினுள் குறுகிய கால வட்டி வீதங்களில் குறைவைக் காண முடியுமாயிருந்தது. அபிவிருத்தியடைந்த பொருளாதார கொள்கை வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டமை, அப்பொருளாதாரங்களில் கொள்கை வட்டி வீதங்கள் பூச்சியத்தை அண்மிக்கின்ற அளவிற்கு குறைந்த பெறுமானத்தைக் கொண்டிருப்பதற்கு காரணமாயிருந்தது. 2009 ஆம் ஆண்டினுள் கொள்கை வட்டி வீதம் பூச்சியத்துக்கு அண்மியதாயிருந்த ஐக்கிய அமெரிக்கா தவிர்ந்த ஏனைய அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களில் கொள்கை வட்டி வீதக் குறைப்புகளின் சராசரி 1.5 சதவீதமாக இருந்தது. அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களின் கொள்கை வட்டி வீதங்களின் குறைப்பு உச்ச மட்டத்தில் நடைபெற்றுள்ளமையால், எதிர்வரும் வருடங்களில் இவ்வீதங்கள் குறிப்பிடத்தக்க மட்டத்தில் குறைவடையும் என எதிர்பார்க்க முடியாது. ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் ரிசர்வ் வங்கி, கனேடிய வங்கி மற்றும் சுவீடன் ரிக்ஸ் வங்கி ஆகியன, பொருளாதாரம் மீட்சியடைகின்ற அடையாளத்தை காணும்வரை வட்டி வீதங்களைக் குறைந்த பெறுமானத்தில் பேணிவருவதற்கு அதிக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு குறுகிய கால வட்டி வீதங்களின் குறைப்பை நீண்ட கால வட்டி வீதம் வரை மாற்றம் செய்வதற்கு முயற்சியெடுத்துள்ளன. ஆயினும் வளர்ச்சியடைந்துவரும் பொருளாதாரங்களில் கொள்கை வட்டி வீதங்களைக் குறைத்தல் குறைந்த மட்டத்தில் நிலவியது. உயர் பணவீக்கம் நிலவியமையும், மூலதனம் நாட்டிலிருந்து வெளியேறியமையால் செலாவணி வீதம் மதிப்பிறக்கமடைவதற்கான அழுத்தமொன்று நிலவியமையும் இதற்கான அடிப்படைக் காரணங்களாக இருந்தன. எவ்வாறாயினும் வளர்ச்சியடைந்துவரும் பொருளாதாரங்கள் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தையும் விட அதிகளவில் மீட்சியடைந்துள்ளமையால் ஒருசில அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்கள் தமது பண விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு வட்டி வீதங்களை அதிகரிக்கலாம் என எதிர்பார்க்க முடியுமாயுள்ளது.

அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களினதும் ஒரு சில அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களினதும் மத்திய வங்கிகள் நிதி நிலைமைகளைத் தளர்த்தும் பொருட்டு 2009 ஆம் ஆண்டினுள் மரபுரீதியிலல்லாத பல முறைகளின்பால் கவனம் செலுத்தின. பல்வேறான நிதியியல் முறைமைக் கட்டமைப்புகளை கொண்டுள்ள இதன் பொருட்டு பல்வேறு அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டன. நிதியியல் முறைமையினுள் வங்கிகளின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு அனைத்து மத்திய வங்கிகளினாலும் வங்கிகளுக்கு அதிகளவில் திரவத்தன்மை வழங்கபபட்டது. வங்கிகளுக்கு திரவத்தன்மையை வழங்கும் பொருட்டு அனேகமான மத்திய வங்கிகள் ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் ரிசர்வ் வங்கியுடன் மேற்கொண்ட வெளிநாட்டு நாணயப் பரிமாற்றுக் கொடுக்கல் வாங்கல்களின் மூலம் பெற்ற அமெரிக்க டொலர்களைப் பயன்படுத்தின. ஏனைய மத்திய வங்கிகளிடையே, ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் ரிசர்வ் வங்கியும் இங்கிலாந்து வங்கியும் நீண்ட கால வட்டி வீதங்களைக் குறைக்கும் நோக்கத்துடன் நிலையான அடிப்படையில் அரச பிணையங்களைக் கொள்வனவு செய்வதில் தலையிட்டன. ஐக்கிய அமெரிக்கப் பொருளாதாரத்திற்கு பிணையங்கள் சந்தையிலுள்ள முக்கியத்துவத்தை அடையாளம்கண்ட, ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் ரிசர்வ் வங்கி அரச அனுசரணையுடன் செயற்படுகின்ற தொழில்முயற்சிகளின் கடன் சந்தை, ஈட்டின் மூலம் காப்பீடு செய்யப்பட்ட பிணையங்கள் சந்தை, வர்த்தகப் பத்திரங்கள் சந்தை ஆகிய சந்தைகளில் தலையிட்டதோடு சொத்துக்களின் மூலம் காப்பீடு செய்யப்படுகின்ற பிணையங்களின் ஊடாக முதலீட்டாளர்களுக்குத் தேவையான நிதியும் பாதுகாப்பும் வழங்கப்பட்டது. மேற்படி நடவடிக்கைகளுடன் கொள்கை வட்டி வீதங்களைக் குறைத்தல் மற்றும் அரசாங்கத்தினால் ஊக்குவிப்புகளை வழங்குதல் ஆகியன நிதிச் சந்தையின் திரவத் தன்மையையும் நம்பிக்கையையும் வளர்ப்பதில் உதவியாயமைந்தன.

உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்பதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட விரிவாக்கல் நாணய மற்றும் அரசிறைக் கொள்கைகள் விரைவாகக் கைவிடப்படின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது உலகளாவிய கேள்வி குறைவடைவதில் தாக்கத்தை ஏற்படுத்துமாகையால், அது தொடர்பில் கவனம் செலுத்தப் பட்டுள்ளது. உலக பொருளாதார வீழ்ச்சியிலிருந்து முழுமையாக மீட்சியடையும் வரை அதற்கு உதவியாயமைகின்ற பேரண்டப் பொருளாதார சூழலைத் தக்கவைக்கின்ற வகையில் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டை மீட்சியடையச் செய்தல் பிரதானமான தேவையாக உள்ளது. நிதியியல் நெருக்கடியின் மூலம் உருவாகிய எதிர்விளைவுகளைக் கவனத்திற்கொள்கின்ற போது, அநேகமான நாடுகளால் கடைப்பிடிக்கப்பட்ட அரச நிதியியல் சலுகைகளை வழங்குவதிலிருந்து நீங்குவது தொடர்பிலேயே தற்போது உலகளாவிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு பயன்படுத்தப்பட்ட மூலோபாயங்களிலிருந்து நீங்குகின்றபோது அதன் மூலம் உருவாகின்ற பாதகமான விளைவுகளைத் தணிக்கும் பொருட்டு சலுகை ரீதியிலான நாணயக் கொள்கை மூலோபாயங்கள் அவசியமாகலாம். பல பொருளாதாரங்கள் அவ்வாறான நிதியியல் சலுகைகள் வழங்குவதைக் குறைக்கின்ற மூலோபாயங்களை ஏற்கனவே ஆரம்பித்துள்ளதோடு, நிதிச் சந்தை வளர்ச்சியடைவதைத் தொடர்ந்து உண்மையிலேயே அவ்வாறான ஒருசில தலையீடுகள் அவசியமாகாத நிலைமைக்கு வந்துள்ளன. நிதி நிறுவனங்களின் பிரச்சினைக்குரிய சொத்துக்களைக் கொள்வனவு செய்யும் பொருட்டு ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் ரிசர்வ் வங்கி 2008 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்திய, சொத்துக்களின் நேர்மாற்று மீள்கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தை இரத்துச் செய்தல் ஏற்கனவே அமுலாக்கப்பட்டுள்ளது. மேலும், அமெரிக்க அரசாங்கம் அவசர சந்தர்ப்பங்களின்போது வங்கிகளுக்கு வழங்கிய கடன்களைத் தீர்க்கும்படியும் வங்கிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது. அதேவேளை, அனேகமான மத்திய வங்கிகள் நிதி நெருக்கடியின் உச்ச கட்டத்தின்போது ஐக்கிய அமெரிக்காவின் ரிசர்வ் வங்கியுடன் மேற்கொண்ட வெளிநாட்டு நாணய பரிமாற்று உடன்படிக்கைகளிலிருந்து மீள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன. யப்பான் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகள் கம்பனி முறிகளைக் கொள்வனவு செய்வதை நிறுத்தியுள்ளன. சந்தையில் மிகைத் திரவத்தன்மையைக் கட்டுப்படுத்தும் பொருட்டு அவுஸ்திரேலியா ஏற்கனவே கொள்கை வட்டி வீத அதிகரிப்பை ஆரம்பித்துள்ளது. மேலும், உள்நாட்டு நிறுவனங்களுக்கு குறைந்த வட்டி வீதத்தின் கீழ் வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவதற்கு உதவியாயமையும் பொருட்டு வெளிநாட்டுச் செலாவணியை நாட்டினுள் ஈர்ப்பதற்காக வளர்ச்சியடைந்துவரும் பொருளாதாரங்கள் செலாவணி ஒழுங்குவிதிகளைத் தளர்த்தியுள்ளன. மீண்டும் சொத்துக்களின் விலைகள் அதிகரிப்பதை (Asset Bubble) அடிப்படையாகக் கொண்ட பொருளாதார விரிவாக்கம் உருவாகாதிருப்பதை உறுதி செய்யும் பொருட்டு 2010 ஆம் ஆண்டில் மத்திய வங்கிகள் கொள்கைத் திரவத்தன்மை முகாமைத்துவத்தில் அதிக கவனம் செலுத்தக்கூடும்.

## நடுத்தரகால பேரண்டப் பொருளாதார தோற்றப்பாடுகள், சவால்களும் கொள்கைகளும்

பயங்கரவாதம் முடிவுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து உருவாகிய தோற்றப்பாடுகளின் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் படிப்படியாக மீட்சிபெறுமெனவும், நடுத்தர கால ரீதியில் உலகளாவிய பொருளாதார நெருக்கடிக்கு முன்னர் நிலவிய மட்டத்தை விட அதிக வேகத்தில் வளர்ச்சி யடையுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. பேரண்டப் பொருளாதார சூழல் முன்னேற்றம்கண்டமை, முதலீட்டாளர் நம்பிக்கை அதிகரித்தமை, பயங்கரவாதம் முடிவுறுத்தப்பட்டமையால் புதிய முதலீட்டு வாய்ப்புகள் உருவாகியமை ஆகியவற்றைத் தொடர்ந்து தகுந்த மூலோபாயங்களைச் செயற்படுத்துவதற்கு கொள்கை வகுப்போர் காட்டுகின்ற அர்ப்பணிப்பு, பாரிய அளவிலான பல உட்கட்டமைப்பு வசதிக் கருத்திட்டங்கள் துரிதமாக நடைமுறைப்படுத்தப்படுதல், புதிதாக மீட்கப்பட்ட பிரதேசங்களில் புனர்வாழ்வளிப்பு மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல், அதேபோன்று உலகளாவிய பொருளாதாரம் எதிர்பார்க்கப்பட்ட மீட்சிநிலையை அடைந்துள்ளமை ஆகியன இவ்வாறான உயர் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான பலத்தை பெற்றுக்கொடுக்கும்.

### பொருளாதார வளர்ச்சி

நடுத்தரகால ரீதியில் 7-8 சதவீத உயர் பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டு வளங்களின் பெறுகைகள் குறிப்பிடத்தக்க மட்டத்தில் நிலவிய போதிலும் இவ்வாறானதொரு பொருளாதார இலக்கை அடைவதற்குத் தேவையான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அண்ணளவாக 30 சதவீதமான முதலீடுகளை முக்கியமாக உள்நாட்டு சேமிப்புகளிலிருந்து மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. நடுத்தரகால ரீதியில் முதலீட்டை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு தேவைப்படுகின்ற உள்நாட்டுச் சேமிப்புகளின் அதிகரிப்பு அரச மற்றும் தனியார்துறை ஆகிய இரு துறைகளிலிருந்தும் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் பொருட்டு அரச வரவு செலவுத் திட்டத்தின் நடைமுறைக் கணக்கில் மிகையைப் பேணிவருதலும் தனியார் சேமிப்புகளை ஊக்குவிக்கும் பொருட்டு குறைந்த பணவீக்கத்துடன் கூடிய சாதகமான பேரண்டப் பொருளாதார சூழலொன்றைப் பேணிவருதலும் அவசியமாயிருக்கும். ஆதலால், 2010 மற்றும் அதற்கு அப்பாலான அரசிறைக் கொள்கைகள் மூலம் அரசிறையை அதிகரிக்கச் செய்தல் மற்றும் நடைமுறைச் செலவுகளைத் தர்க்க ரீதியிலானதாக்குதல் ஊடாக அரச நிதியியல் ஒருமைப்பாட்டுக்கான நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்துவதற்கான வழிப்படுத்தல்கள் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. சந்தைத் தொழிற்பாடுகளை தடையின்றி மேற்கொள்வதற்குத் தேவையான திரவத் தன்மையை வழங்குவதற்கும் கேள்வியின் மூலம் உருவாகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுத்தத்தைத் தணிப்பதற்குமாக பண விரிவாக்கல் தகுந்த மட்டத்தில் பேணிவரப்படும். நடுத்தரகால ரீதியில் பணவீக்கம் தனி இலக்கத்திலான பெறுமானத்தைக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐந்து மாதத்திற்கும் அதிக கால இறக்குமதிக்குப் போதியளவில் ஒதுக்குகள் பேணிவரப்பட்டு வெளிநாட்டுத் துறை மேலும் பலப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதைத் தவிர, மின்வலு, சக்தி துறைகள் உள்ளடங்கலாக அடையாளம்காணப்பட்ட கட்டமைப்பு ரீதியிலானதும் நிறுவன ரீதியிலானதுமான மாற்றங்களை நம்பகத்தன்மைக்குரிய மட்டத்தில் நடைமுறைப்படுத்தல், முதலீட்டுச் சூழலை மேலும் வளர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தல், பயங்கரவாதம் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் உருவாகியுள்ள சாதகமான வாய்ப்புகளை பயனுறுதியானவாறு பயன்படுத்துதல், தற்போது நடைமுறையிலுள்ள மற்றும் திட்டமிடப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகளுக்கான கருத்திட்டங்களை உரிய காலத்தினுள் பூர்த்தி செய்வதன் மூலம் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பில் நிலவுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டை மேலும் பலப்படுத்தல் ஆகியனவும் எதிர்பார்க்கப்படுகிறது. உலகளாவிய பொருளாதாரத்தின் எதிர்பார்க்கப்பட்ட அனுகூலமான நிலைமை, சாதகமான பாதுகாப்பு நிலைமை மற்றும் நெருக்கடிகள் நிலவிய பிரதேசங்களிலிருந்து கிடைக்கின்ற பங்களிப்பு ஆகியன வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் சுற்றுலாத்துறை நடவடிக்கைகளையும் அதேபோன்று வெளிநாட்டு முதலீடுகளையும் அதிகரிக்கச் செய்வதற்கு உதவியாயமையும். நடுத்தரகால ரீதியில் வர்த்தக நிலுவை விரிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், வெளிநாட்டுத் தொழில் புரிவோரின் பணவனுப்பல்கள் எதிர்பார்க்கப்படுகின்றவாறு அதிகரிப்பதன் மூலம் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், அரசாங்கத்திற்கும் அதேபோன்று தனியார் துறைக்கும் வெளிநாட்டுச் செலாவணி பெருமளவில் கிடைப்பதன் மூலம் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்குத் தேவையான அளவை விட அதிகளவிலான மிகையொன்று மூலதன மற்றும் நிதிக் கணக்கில் உருவாகுமென எதிர்பார்க்கப்படுவதோடு, அதன் மூலம் சென்மதி நிலுவையில் மிகையொன்று உருவாகும். எவ்வாறாயினும், உலகளாவிய பொருளாதாரம் மீட்சியடைதல் தேவையான வேகத்தில் நடைபெறாமை, உட்டமைப்பு ரீதியிலான மாற்றங்களை மேற்கொள்வதிலுள்ள தாமதம், எதிர்பாராவிதத்தில் வர்த்தகப் பண்டங்களின் விலைகள் அதிகரித்தல், குறிப்பாக எண்ணெய் விலைகள் அதிகரித்தல் மற்றும் காலநிலையினால் ஏற்படக்கூடிய பாதகமான தாக்கங்கள் ஆகியன எதிர்பார்க்கப்படுகின்ற நடுத்தரகால இலக்கை அடைவதில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு உள்ளது.

பயங்கரவாதம் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் முதலீட்டாளர்களுக்கு மத்தியில் உருவாகிய சாதகமான மனப்பாங்குகள் மற்றும் உலகளாவிய நிதிச் சந்தை மீட்சியடைந்தமையின் காரணமாக, 2010 ஆம் ஆண்டிலும் அதற்கு அப்பாலும் அரசாங்கத்திற்கும் தனியார் துறைக்குமான நேரடி வெளிநாட்டு முதலீடுகள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நிதியின் உட்பாய்ச்சல் பெருமளவில் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், உலகளாவிய திரவத்தன்மை நெருக்கடிகள் தளர்வடைந்ததைத் தொடர்ந்து அரசாங்கத்திற்கும் தனியார்துறைக்கும் பன்னாட்டு நிதிச் சந்தையிலிருந்து போட்டி ரீதியிலான வட்டி வீதத்தின் கீழ் நிதியங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமாயிருக்கும். பல்வேறான அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு அபிவிருத் தியின் பங்குதாரர்களால் வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ள திரண்ட நிதியங்களின் அளவு 2008 ஆம் ஆண்டு இறுதியிலான அமெரிக்க டொலர் 5.9 பில்லியனுக்கு ஒப்பீட்டளவில் 2009 ஆண்டு இறுதியில் அமெரிக்க டொலர் 6.4 பில்லியனாக இருந்தது. இந்நிதியத்தின் கீழ் கருத்திட்டங்களை அமுலாக்குகின்ற காலம் 2-5 ஆண்டுகளாக இருக்குமென்பதோடு, இதில் அநேகமானவை நாட்டின் உற்பத்திக் கொள்ளளவை மேலும் விஸ்தரிப்பதற்குக் காரணமாயமைகின்ற உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பானவையாகும். இவற்றைத் தவிர குறிப்பாக சுற்றுலா, வேளாண்மை, நிர்மாணிப்பு, தயாரிப்புக் கைத்தொழில்கள் ஆகிய துறைகளுக்கு நேரடியான வெளிநாட்டு முதலீடுகள் பெருமளவில் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவிய பயங்கரவாதப் பிரச்சினை முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் உருவாகிய புதிய சந்தர்ப்பங்களிலிருந்து உயர்ந்தபட்ச பிரதிபலன்களைப் பெறுவதற்கு சிறந்ததொரு திட்டமிடலும் இணைப்பாக்கமும் அதேபோன்று கடும் அர்ப்பணிப்பும் அவசியமாகின்றது. 'கிழக்கின் உதயம்' மற்றும் 'வடக் கின் வசந்தம்' ஆகிய நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் அடையாளம்காணப்பட்ட பல்வேறு புனர்வாழ்வளிப்பு, மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் உரிய காலத்தினுள் நடைமுறைப்படுத்தப்படுதல், பிரச்சினைகள் நிலவிய பிரதேசங்களிலும் அதேபோன்று நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் பொருளாதாரத் தொழிற்பாடுகளை மேம்படுத்துவதற்கு வழிவகுக்கும். உட்கட்டமைப்பு வசதிகள், வேளாண்மை, சுற்றுலா, போக்குவரத்து, சுகாதாரம், கல்வி, கைத்தொழில்கள், வர்த்தகம், கடற்றொழில் மற்றும் பணிகள் துறைகளில் புதிய முதலீட்டு வாய்ப்புகள் உருவாகும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல கருத்திட்டங்களை ஆரம்பிக்கும் பொருட்டு முதலீட்டுச் சபையின் அங்கீகாரம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. நீண்ட கால ரீதியில் முழு நாட்டிற்கும் உயர்ந்தபட்ச பெறுபேறுகளைப் பெற்றுக்கொடுக்கும் பொருட்டு இந்த இரண்டு மாகாணங்களினதும் அபிவிருத்திப் பணிகளை துரிதமாக்குவதற்கு, இதுவரை மேற்கொள்ளப்பட்ட அர்ப்பணிப்பை தொடர்ச்சியாகப் பேணிவருதல் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு வேளாண்மைப் பொருட்களின் விலைகள் தளம்பலுக்கு உள்ளாதல் பணவீக்கத்தின் உயர்ந்தளவு அசைவுக்கு ஏதுவாயமைகின்றது. தகுந்த நிதி மற்றும் அரசிறைக் கொள்கைகளைப் பயன்படுத்தி ஒட்டுமொத்தமான கேள்வியையும் கட்டுப்படுத்துதல் நீண்ட கால ரீதியில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துகின்ற பிரதானமான வழிமுறை யாக இருக்கும். எவ்வாறாயினும், குறுகிய கால ரீதியில் வேளாண்மைப் பண்டங்களின் விலைகளில் ஏற்படுகின்ற தளம்பல்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு களஞ்சிய வசதிகளின் பற்றாக்குறை, போக்குவரத்தில் நிலவுகின்ற பலவீனங்கள், ஒருசில பிரதேசங்களில் நிலவுகின்ற உழைப்புக்கான பற்றாக்குறை அதேபோன்று வெயில்-மழை ஆகியவற்றின் காரணமாக உருவாகின்ற பிரச்சினைகள் ஆகிய நிரம்பல் துறையின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் முக்கியமானதாயிருக்கும். நீர்ப்பாசன வசதிகள், கஷ்டப் பிரதேசங்களின் போக்குவரத்து வசதிகள், விவசாய விஸ்தரிப்புப் பணிகள், உயர் விளைச்சலைக் கொண்ட பயிர் வகைகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி ஆகிய வசதிகளை முன்னேற்றுவதை நோக்கமாகக் கொண்ட கொள்கைகள் உற்பத்தித்திறனை விருத்தி செய்வதற்கும் அதேபோன்று உற்பத்திச் செலவினத்தைக் குறைக்கும் பொருட்டும் உதவியாயமையும். அதேவேளை, காலத்திற்குக் காலம் விலை மட்டங்கள் பெருமளவில் தளம்பலுக்கு உள்ளாவதைத் தடுக்கும் பொருட்டு பிரதானமான உணவுப் பயிர்களின் மேலதிக கையிருப்புகளைப் பேணிவருதல், தேசிய மற்றும் பிராந்திய மட்டத்தில் உள்ள களஞ்சிய வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அத்தியாவசியமாகும். மேலும், முன்னோக்கிய வர்த்தக உடன்படிக்கைகளைப் போன்றே விவசாயப் பண்டங்களின் பரிமாற்றச் சந்தையை (Commodity Exchange) பிரபல்யப் படுத்துவதற்கு ஊக்கமளிப்பதன் மூலம் விலைத் தளம்பல் களைக் குறைக்க முடியுமாயிருக்கும் என்பதோடு, உற்பத்தியா ளர்களின் வருமானத்தை உறுதிப்படுத்துவதற்கும் அது உதவியாயமையும்.

## நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு

உலகளாவிய நிதி நெருக்கடியின் காரணமாகவும் ஒருசில உள்நாட்டு நிதி நிறுவனங்களுடன் தொடர்புடைய ஏனைய கம்பனிகள் சில வெற்றியளிக்காமையின் காரணத்தினால் உருவாகிய பிரச்சினைகளாலும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டை உறுதிசெய்வதற்கான ஒழுங்குமுறையாக்கல் மற்றும் மேற்பார்வை கட்டமைப்பை மேலும் பலப்படுத்துகின்ற அவசியம் வலியுறுத்தப்பட்டது. உறுதிப்பாட்டுடன் கூடிய நிதியியல் முறைமையின் மூலம் வாடிக்கையாளர்களைப் பாதுகாத்தல் மற்றும் நிதித் துறையின் அபிவிருத்தியை உறுதிசெய்தலும் அதேபோன்று பேரண்டப் பொருளாதாரக் கொள்கை நடவடிக்கைகளை வினைத்திறன்மிக்க விதத்தில் அனுப்பீடு செய்தலும் உறுதிசெய்யப்படுகிறது. இவ்வாறானதொரு பின்னணியின் கீழ் சட்டரீதியான கட்டமைப்பை பலப்படுத்துவதன் ஊடாக ஒழுங்குமுறையாக்கல் மற்றும் மேற்பார்வைப் பணிகளை விருத்தி செய்வதன் மூலம் நிதியியல் முறைமையின் பலத்தையும் அதேபோன்று பாதுகாப்புத் தன்மையையும் மேம்படுத்துவதற்கு மத்திய வங்கி நடவடிக்கை எடுத்தது. நிதியியல் முறைமை தொடர்பிலான பொதுமக்களின் நம்பிக்கையை அதிகரிக்கச் செய்கின்ற மேலுமொரு நடவடிக்கையாக வைப்புக் காப்புறுதி நிகழ்ச்சித் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. உலகளாவிய நிதி நெருக்கடி உருவாகியமையைத் தொடர்ந்து வைப்பாளர்களுக்கு நட்டஈடு செலுத்துவதற்கு வினைத்திறன்மிக்க செயற்பாடொன்று இருப்பதன் தேவை வலியுறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக, கட்டாய வைப்புக் காப்புறுதி நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தாபித்தல் நிதியியல் முறைமை தொடர்பிலான பொதுமக்களின் நம்பிக்கையை அதிகரிக்கச் செய்வதற்கும் பேணிவரு வதற்கும் உதவியாயமையும். நிதியியல் பாதுகாப்பு வலையமைப்பின் பிரதானமானதொரு அம்சமாகவுள்ள வைப்புக் காப்புறுதியின் மூலம் தனது தற்றுணிபின் பிரகாரம் தீர்மானம் மேற்கொள்வதற்கான வாய்ப்புகளை வரையறுத்தலும் அதேபோன்று வெற்றியளிக்காத வங்கிகளை மீட்டெடுப்பதற்குமான செலவினத்தைக் குறைப்பதற்கு உதவியளித்தலும், வெற்றியளிக்காத வங்கிகள் தொடர்பாகச் செயலாற்றுவதற்கு வினைத்திறன்மிக்க செயன்முறையொன்றும் ஏற்படுத்தித் தரப்படுகின்றது. நிதியியல் பாதுகாப்பு வலையமைப்பின் ஏனைய அம்சங்களான மதினுட்பமுடைய ஒழுங்குமுறையாக்கலும் அதேபோன்று இறுதிக் கடன் வழங்கு பவராகச் செயலாற்றுகின்ற செயற்பாட்டிற்கும் திட்டவட்டமான வைப்புகள் பாதுகாப்பு வேலைத்திட்டமொன்றின் மூலம் உறுதுணை வழங்கப்படும். உயர் இடையீட்டுச் செலவினத்தைக் குறைப்பதற்கும் அதேபோன்று அதிர்ச்சிகளுக்கு வெற்றிகரமாக முகம்கொடுப்பதற்கும் நிதியியல் முறைமைக்குள்ள ஆற்றலை வளர்க்கும் பொருட்டு நிதியியல் முறைமையை மேலும் மேம்படுத்துதல் அவசியமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 வது வரைபடம்
## நடுத்தரகால பேரண்டப் பொருளாதார கட்டமைப்பு (அ)

| குறிகாட்டி | அலகுகள் | எறிவுகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2008(ஆ) | 2009(ஆ) | 2010 | 2011 | 2012 | 2013 |
| **உண்மைத்துறை** | | | | | | | |
| சந்தை விலைகளில் மொ.உ.உ. | ரூ. பில்லியன் | 4411 | 4825 | 5445 | 6202 | 7064 | 8009 |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | 6.0 | 3.5 | 6.5 | 7.5 | 8.0 | 8.0 |
| பணவீக்கம் மொ.உ.உ. சுருக்கி | % | 16.3 | 5.7 | 6.0 | 6.0 | 5.5 | 5.0 |
| மொத்த முதலீடு | மொ.உ.உ. % | 27.6 | 24.5 | 27.8 | 29.5 | 32.0 | 33.0 |
| உள்நாட்டு சேமிப்பு | மொ.உ.உ. % | 13.9 | 18.0 | 18.6 | 20.4 | 23.0 | 24.2 |
| தேசிய சேமிப்பு | மொ.உ.உ. % | 17.8 | 23.9 | 24.2 | 26.3 | 29.2 | 30.4 |
| **வெளிநாட்டுத்துறை** | | | | | | | |
| வர்த்தக இடைவெளி | ஐ.அ.டொ.மில் | -5981 | -3122 | -4874 | -5588 | -6307 | -7042 |
| ஏற்றுமதிகள் | ஐ.அ.டொ.மில் | 8111 | 7.085 | 8094 | 9067 | 10197 | 11528 |
| இறக்குமதிகள் | ஐ.அ.டொ.மில் | 14091 | 10207 | 12968 | 14655 | 16504 | 18571 |
| பணிகள் (தேறிய) | ஐ.அ.டொ.மில் | 401 | 391 | 517 | 695 | 837 | 996 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | ஐ.அ.டொ.மில் | -3886 | -214 | -1642 | -1638 | -1642 | -1766 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | மொ.உ.உ. % | -9.5 | -0.5 | -3.5 | -3.1 | -2.7 | -2.6 |
| திரண்ட நிலுவை (ஈ) | ஐ.அ.டொ.மில் | -1385 | 2725 | 700 | 967 | 902 | 970 |
| வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் | மாதங்கள் | 1.4 | 6.0 | 5.3 | 5.5 | 5.5 | 5.0 |
| (மாதத்திற்கான இறக்குமதி) (ஈ) (உ) (ஊ) | | 15.1 | 19.0 | 14.5 | 15.3 | 19.8 | 18.5 |
| படுகடன் பணிவிகிதம் (எ) | | | | | | | |
| **இறைத்துறை** | | | | | | | |
| அரசிறை மற்றும் அளிப்புகள் | மொ.உ.உ. % | 15.6 | 15.1 | 15.4 | 16.6 | 17.5 | 17.6 |
| செலவினம் மற்றும் தேறிய வழங்கல் | மொ.உ.உ. % | 22.6 | 24.9 | 23.0 | 23.1 | 22.5 | 22.4 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | மொ.உ.உ. % | -2.0 | -3.6 | -1.9 | 0.4 | 1.0 | 1.2 |
| திரண்ட வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை | மொ.உ.உ. % | -7.0 | -9.8 | -7.5 | -6.5 | -5.0 | -4.8 |
| உள்நாட்டு நிதியிடல் | மொ.உ.உ. % | 7.1 | 5.0 | 5.1 | 3.5 | 3.4 | 3.5 |
| **நிதியியல்துறை (ஏ)** | | | | | | | |
| ஒதுக்குப் பண வளர்ச்சி | % | 1.5 | 13.1 | 13.5 | 14.0 | 13.9 | 13.4 |
| விரிந்த பண வளர்ச்சி ($M_{2b}$) | % | 8.5 | 18.6 | 13.5 | 14.1 | 14.0 | 13.5 |
| குறுகிய பண வளர்ச்சி ($M_1$) | % | 4.0 | 21.4 | 7.5 | 8.1 | 8.0 | 8.0 |
| தனியார்துறைக் கொடுகடனின் வளர்ச்சி | % | 7.0 | -5.7 | 13.2 | 15.1 | 17.3 | 17.2 |
| அரச துறைக் கொடுகடனின் வளர்ச்சி | % | 48.8 | 13.1 | 7.4 | 5.1 | 0.6 | -1.5 |

மூலங்கள்: நிதி, திட்டமிடல் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

(அ 2010 மார்ச் நடுப்பகுதியில் கிடைக்கத்தக்கதாகவிருந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானவை
(ஈ) வெளிநாட்டுச் சொத்துக்கள் வகைப்படுத்தலிலான மாற்றத்தின் காரணமாக 2008 ஆம் ஆண்டில் மத்திய வங்கி உள்நாட்டு வங்கிகளிலுள்ள வெளிநாட்டு நாணயச் சொத்துகளை தவிர்த்து கணிப்பிட்டுள்ளது
(உ) ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் பெறுகைகள் தவிர்ந்த
(ஊ) 2010 ஆம் ஆண்டிலிருந்து வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகளில், 2009 ஆம் ஆண்டில் பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்கு கிடைக்கப்பெற்ற துணைநில் ஒழுங்கு வசதிகளின் கீழ் எதிர்பார்க்கப்படும் உட்பாய்ச்சல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
(எ) வணிக ஏற்றுமதிகளிலும் பணிகளிலிருந்துமான வருவாய்களின் சதவீதமாக மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்
(ஏ) ஆண்டின் இறுதிப் பெறுமதிகளில் புள்ளிக்குப் புள்ளி வளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசிறைக் கொள்கை

கேள்வி முகாமைத்துவக் கொள்கையை ஒழுங்கான விதத்தில் மேற்கொள்ளக்கூடிய வகையிலும் அதேபோன்று அரச முதலீடுகளை அதிகரிப்பதன் மூலமும் நிலைபேறான உயர் பொருளாதார வளர்ச்சியை அடையக்கூடியவாறு அரசிறை ஓர்மைப்பாட்டுச் செயற்பாட்டினைத் தொடர்ந்தும் பலப்படுத்துதல் வேண்டும். அரசிறை ஒப்பீட்டளவில் குறைந்த மட்டத்தில் நிலவுகின்றமை நாட்டின் வரி முறையைப் பலப்படுத்துவதன் தேவையை எடுத்துக்காட்டுகின்றது. இதன்படி, தகுந்த வரி வீதங்களை அறிமுகப்படுத்தல், வரித் தளத்தை விஸ்தரித்தல், வரிச் சலுகைகள் மற்றும் வரி விடுவிப்புகளைத் தர்க்க ரீதியிலானதாக்குதல், இறக்குமதி வரி உள்ளமைப்பின் சிக்கலான தன்மையைக் குறைத்தல் மற்றும் வரி சேகரிப்பினை மேம்படுத்தும் பொருட்டு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல் மற்றும் வரி நிருவாகத்தை மேம்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகளின் மூலம் வரி முறையை எளிமையாக்குதல் இலகுவானதாக இருக்கும். வினைத்திறன்மிக்க வரி நிருவாகமானது தனியார்துறையின் பொருளாதாரச் செயற்பாடுகள் மற்றும் மூலதன உருவாக்கத்தை ஊக்குவிக்கும். குறுகியகால ரீதியில் மீண்டுவரும் செலவுகளைக் குறைப்பதற்கான வாய்ப்புகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் செலவுகளைத் தர்க்கரீதியிலானதாக ஆக்குவன் மூலம் பெறக்கூடிய பிரதிபலன்களை நடுத்தரகால ரீதியில் மட்டுமே எதிர்பார்க்க முடியுமாயிருக்கும். தற்போதைய மீண்டுவரும் செலவுகளில் உயர் வளர்ச்சியைத் தொடர்ச்சியாகப் பேணிவர முடியாததால் ஒப்படைப்புகள், நிவாரணங்கள், ஓய்வூதியம் மற்றும் வட்டி செலுத்துதல்கள் ஆகிய செலவுகளுக்கான அடிப்படைக் காரணங்களை ஆராய்வதன் மூலம் அத்தகைய செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு அவசியமான பயனுறுதி யான வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும். அதேபோன்று தகுந்த பாதுகாப்பு முறைகளின் மூலம், இடருக்கு உள்ளாகின்ற சமூகத்தின் பல்வேறு துறைகளையும் பாதுகாத்தல் வேண்டும்.

முழுப் பொருளாதாரத்தினதும் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை வளர்த்தலும், நீண்டகால பொருளாதார வளர்ச்சியை அடையப்பெறும் பொருட்டும் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ள உள்ளமைப்பு ரீதியிலானதும் நிறுவன ரீதியிலானதுமான மறுசீரமைப்புகளைச் செயற்படுத்த வேண்டியுள்ளது.

இது தொடர்பில், அரசாங்கத்துக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள், சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளில் வினைத்திறனையும் உற்பத்தித்திறனையும் வளர்க்கும் பொருட்டு பலம் பொருந்திய ஒழுங்குமுறையாக்கல் முறைமைகளுடன் தேவையான மறுசீரமைப்புகளைச் செயற்படுத்துதல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுதல் அத்தியாவசியமாக உள்ளது. முக்கியமான உட்கட்டமைப்புச் சேவைகளை வழங்குகின்ற அரசாங்கத்துக்குச் சொந்தமான மின்வலு, பெற்றோலியம் மற்றும் நீர் வழங்கல் ஆகிய பல நிறுவனங்கள் அரசாங்கத்துக்குச் சொந்தமான ஏகபோக நிறுவனங்களாக இருந்த போதிலும் அவை போற்றத்தகு மட்டத்தை விட குறைந்த மட்டத்திலேயே செயற்பட்டு வருகின்றன. அநேகமான இந்த நிறுவனங்களின் மூலம் வழங்கப்படுகின்ற சேவைகள் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை விட குறைந்த மட்டத்தில் நிலவுகின்றதோடு, வர்த்தக ரீதியில் சாத்தியப்பாடுகளுடன் கூடிய நிறுவனங்களாகச் செயற்படாது அரச நிதியங்களின் மீது அதிகமாகத் தங்கியிருக்கின்றன. எனவே, இந்நிறுவனங்கள் அரச நிதியங்களின் மீது தங்கியிருப்பதைக் குறைக்கும் பொருட்டு செலவை ஈடுசெய்கின்ற அடிப்படையிலும் வினைத்திறனை வளர்க்கின்ற அடிப்படையிலும் செயற்படுதல் அவசியமாகும். எதிர்வரும் ஆறு ஆண்டுகளினுள் சேவைநிலைய வினைத்திறனையும் உற்பத்தித்திறனையும் ஐம்பது சதவீதத்தால் அதிகரிக்கச் செய்வதற்கான அரச கொள்கை ரீதியிலான நடவடிக்கைகளை நம்பகத்தன்மையுடன் கூடியதாக செயற்படுத்துதலும் அவசியமாகும்.

## வலுசக்தித் துறை

வலுசக்தித் துறையின் நிதியியல் செயற்பாட்டில் நிலவிய குறைபாடுகளின் காரணமாக நாட்டில் நிதியியல் முகாமைத்துவம் தொடர்ச்சியாக கடும் சவாலுக்கு உள்ளாகியுள்ளது. அரசிறை மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பில் அழுத்தத்தை ஏற்படுத்தும் வகையில் இலங்கை மின்சார சபையின் (இ.மி.ச.) நிதி நிலைமை பல வருடங்களாக குறிப்பிடத்தக்களவு பலவீனமான மட்டத்திலேயே நிலவியது. ஆகையால், இ.மி.ச.வை நீண்டகால நிதியியல் சாத்தியப்பாட்டுடன் கூடிய நிறுவனமாக மாற்றுவதற்கும் அதன் மூலம் அரச வரவு செலவுத் திட்டத்திலும் வங்கிக் கடன்களிலும் தங்கியிருப்பதைக் குறைக்கும் பொருட்டும் இலங்கை மின்வலுச் சட்டத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளவாறான ஏற்பாடுகளுடன், பலம் பொருந்திய மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றை செயற்படுத்துதலும் அவசியமாக உள்ளது. நீர் மின்சக்தியினதும் அனல் மின்சக்தியினதும் அனுப்பல் மற்றும் விநியோகம் போன்ற அடிப்படைத் தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்காக விசேடமான இலாபமீட்டும் அலகுகள் மற்றும் முகாமைத்துவ அலகுகளை அறிமுகப்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். இந்த இலாபமீட்டும் அலகுகள் மற்றும் முகாமைத்துவ அலகுகள் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்படுவதன் மூலம் அவற்றின் தொழிற்பாட்டுச் செயலாற்றுகைகளின் பகிரங்கத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மையை மேம்படுத்த முடியுமாயிருக்கும். மின்சக்தித் துறையின் நிலைபேறான தன்மையானது நடுத்தரகால ரீதியில் குறைந்த செலவின மின்சக்தியை உற்பத்தி செய்தல் தொடர்பில் கவனம் செலுத்துவதன் மீதே பெருமளவில் தங்கியுள்ளது. ஏற்கனவே செயற்படுகின்ற மற்றும் திட்டமிடப்பட்டுள்ள குறைந்த செலவிலான மின்சக்தி நிலையங்களை எதிர்வரும் ஆண்டுகளில் தேசிய வலுசக்தி முறைமையில் சேர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதோடு, அதன் மூலம் பாதகமான காலநிலை மற்றும் எரிபொருள் விலை அதிகரிப்பின் மூலம் மின்வலுத்துறையில் ஏற்படுகின்ற பாதகமான தாக்கம் குறைவடையும். ஆதலால், திட்டமிடப்பட்ட குறைந்த ஆகுசெலவுடன் கூடிய வலுசக்திக் கருத்திட்டங்களைச் செயற்படுத்துதல் தாமதாகுமெனில், மின்வலு உற்பத்திக்கான எரிபொருள் இறக்குமதிக்கு பெருமளவு செலவினத்தை ஏற்பதற்கும் அதிகளவிலான மின் கட்டணத்தைப் பேணிவரவும் நேரிடுமென்பதால் அக்கருத்திட்டங்களை உரிய காலத்தில் பூர்த்தி செய்தல் அத்தியாவசியமாக உள்ளது. மின்வலுத்துறையின் விலைகளைத் தீர்மானித்தல் மற்றும் ஒழுங்குமுறையாக்கல் பணிகள் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் கீழ் பலப்படுத்தப்படுலும் அவசியமாகும்.

2009 ஆம் ஆண்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிச் செயலாற்றுகைகளில் ஓரளவு வளர்ச்சி காணப்பட்ட போதிலும், நீண்டகால நிதியியல் சாத்தியப்பாடு இடர்நேர்வுடன் கூடிய நிலைமையில் உள்ளது. இ.மி.ச. வுக்கு அதிக நிவாரண விலையில் எரி எண்ணெய் வழங்கப்படுதல், செலவினத்தைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் சில்லறை விலைகள் திருத்தப்படாமை, இ.மி.ச. உள்ளடங்கலாக பல நிறுவனங்களின் தீர்க்கப்படாத கடன்கள் குறிப்பிடத்தக்களவில் நிலவுகின்றமை ஆகியவற்றின் காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையில் அதிக அழுத்தம் ஏற்பட்டுள்ளது. ஆதலால், நடுத்தரகால மற்றும் நீண்டகால ரீதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை நிதி ரீதியில் பலம் பொருந்தியதொரு நிறுவனமாக மாற்றும் பொருட்டு பொருத்தமான மாற்றங்களை அறிமுகம் செய்துவைத்தல் அவசியமாகும். உள்நாட்டுச் சந்தையில் எரிபொருள் விளைகளைத் தீர்மானிக்கும் பொருட்டு தர்க்க ரீதியிலானதும் நெகிழ்வுத் தன்மையுடன் கூடியதுமான விலைப் பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்துதலும், சுத்திகரிப்புப் பணிகள், விவசாய இரசாயனப் பொருட்களை வழங்கல் மற்றும் விமான எரிபொருட்களை வழங்குதல் ஆகியவாறான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிரதானமான பணிகளை உள்ளடக்கியதாக இலாபமீட்டும் அலகுகள் மற்றும் முகாமைத்துவ நிலைய அலகுகள் எண்ணக்கருவைச் செயற்படுத்துதல் ஆகியவற்றை இப்பொறிமுறையில் உள்ளடக்கலாம். அதேபோன்று, தற்போது நடைபெற்று வருகின்ற எண்ணெய் கண்டுபிடிப்புப் பணிகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்கின்ற அதேவேளை மன்னார் கடற் படுக்கையின் எஞ்சிய பகுதிகளில் எண்ணெய் கண்டுபிடிப்பின் பொருட்டு அடுத்த கட்டத்திற்குத் தேவையான உரிமப் பத்திரம் வழங்குதலை ஆரம்பித்தலும் அதேபோன்று அதிக பெறுபேறுகளைப் பெறக்கூடிய காவேரி படுக்கையின் ஒருசில பகுதிகளுக்கான உரிமப் பத்திரங்களை வழங்குதலும் முக்கியமானதாக இருக்கும்.

## உயர் கல்வி

அறிவு தொடர்பிலான புதிய வழிகளை ஆராய்வதற்கும், பொருளாதாரத்தின் மாற்றமுறும் தேவைகளுக்கு முகம்கொடுக்கும் பொருட்டும் தற்போதுள்ள நிரம்பலின் அடிப்படையிலான கல்வி முறைக்குப் பதிலாக சந்தைக் கேள்வியின் அடிப்படையிலான கல்வி முறையொன்றை உருவாக்குவதற்கு உயர் கல்வி முறையை மீளமைத்தல் அவசியமாகும். அரசாங்கத்தினால் கல்வியை மேம்படுத்தும் பொருட்டு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும் நகர்ப்புற பாடசாலைகளுக்கும் ஏனைய பாடசாலைகளுக்கும் இடையே நிலவுகின்ற முரண்பாட்டுக்குத் தீர்வு காணும் பொருட்டு மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தல் வேண்டுமென்பதோடு, மூன்றாம் நிலைக் கல்வியில் பிரவேசிப்பதற்கான வாய்ப்புகளையும் அதன் ஏற்புடைய தன்மையையும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தலும் வேண்டும். அரசிறை மட்டுப்பாடுகளைக் கவனத்திற் கொள்கின்றபோது தேசிய பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெறுகின்ற வாய்ப்புகளை விஸ்தரிப்பதற்கு உள்ள இடவசதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதோடு, அது கேள்வியை விட பெரும்பாலும் தாழ் மட்டத்திலேயே நிலவுகின்றது. ஆதலால், பெருந்தொகையான மாணவர்கள் அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் அவுஸ்திரேலியாவில் அமைந்துள்ள பல்கலைக் கழகங்களுக்கும் தென் ஆசிய பிராந்தியத்திற்கும் கல்வியைப் பெறுவதற்காகச் செல்கின்றனர். இவ்வாறு கல்விக்காக நாட்டிலிருந்து வெளியேறுகின்ற வெளிநாட்டுச் செலாவணி குறிப்பிடத்தக்களவு உயர் பெறுமானத்தைக் கொண்டுள்ளதென்பது மதிப்படப்பட்டுள்ளது. ஆதலால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டினுள் உயர் கல்வியின் பொருட்டு அதிகரித்து வருகின்ற பெருமளவு கேள்வியை நிறைவு செய்வதற்கு, பொருத்தமான சட்டவிதிகளுக்கமைய அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுடன் கூடிய அரச சார்பற்ற துறையின் கல்வி நிறுவனங்களுக்கு உயர் கல்வி நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கு அனுமதி வழங்குதல் மிக முக்கியமானதாகும்.

## அரச-தனியார் கூட்டுமுயற்சி

மூலதனம் மற்றும் தொழில்முயற்சிகளைக் கவருகின்ற தான மாற்று வழிமுறையொன்றாக அரச-தனியார் கூட்டுமுயற்சி அடையாளம்காணப்பட்டுள்ளது. வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை விரிவடைவதற்கும் அரசாங்கத்தின் தீர்க்கப்படாத கடன் அதிகரிப்பதற்கும் காரணமாக அமைகின்ற அரச வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக உட்கட்டமைப்பு வசதிகள் கருத்திட்டங்களை நிதியிடுகின்றதான தற்போதைய முறைக்குப் பதிலாக பல்வேறான உட்கட்டமைப்பு வசதிகள் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றபோது அரச-தனியார் கூட்டுமுயற்சி மாதிரியை மேம்படுத்துதல் விசேடமாக வலியுறுத்தப்படுகின்றது. அரச-தனியார் கூட்டுமுயற்சியின் முக்கியத்துவத்தை அடையாளம்கண்டுள்ள போதிலும், அது தொடர்பாகவுள்ள அறிவு போதியதாயில்லாமை, இவ்வாறான கருத்திட்டங்களுக்கு தனியார்துறை முதலீட்டாளர்களைக் கவர்வதற்கு சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட ஒரு திட்டம் இல்லாமை போன்ற பல காரணங்களால் இலங்கை கடந்த ஆண்டுகளில் இது தொடர்பில் பெற்றுள்ள முன்னேற்றம் போதியதாயில்லை. ஆதலால், அரச-தனியார் கூட்டுமுயற்சியின் கீழ் தனியார்துறை பங்குபற்றக்கூடியதான திட்டவட்டமான கருத்திட்டங்களை அடையாளம்காணுதல் முக்கியமானதாக இருக்கும் என்பதோடு, தனியார் துறையினால் செயலூக்கம்மிக்க வகையில் அரச-தனியார் கூட்டுமுயற்சியில் பங்குபற்றக்கூடிய ஒரு சூழலும் உருவாக்கப்படுதல் வேண்டும்.

## உற்பத்தி மற்றும் சந்தை பல்வகைப் படுத்தல்

உற்பத்தி மற்றும் சந்தை ஆகிய இரு துறைகளிலும் பல்வகைப்படுத்தலை உருவாக்கும் பொருட்டு இலங்கையின் நடுத்தரகால ஏற்றுமதி மூலோபாய வழிமுறைகளை ஆற்றுப்படுத்துதல் வேண்டும். பண்டங்கள் மற்றும் பணிகள் பல்வகைப்படுத்தலின் பொருட்டு ஏற்றுமதியாளர்களை ஊக்குவித்தல் வேண்டுமென்பதோடு, அதன் பொருட்டு வணிகக் குறியிடல், பெறுமதி சேர்த்தல் மற்றும் உற்பத்தியின் பல்வகைப்படுத்தல் அவசியமாயுள்ளதோடு அதன் மூலம் ஏற்றுமதிச் சந்தையின் பல்வேறு துறைகளின் தேவைகளை நிறைவு செய்வதற்கு இயலுமாவதன் மூலம் புதிய ஏற்றுமதிச் சந்தையைக் கைப்பற்றுவதற்கும் இயலுமாயிருக்கும். வர்த்தகத் தொழிற்பாடுகளை வெளிவாரி மூலங்களுக்கு ஒப்படைத்தல் (BOPS) மற்றும் அறிவை அடிப்படையாகக் கொண்ட வர்த்தகத் தொழிற்பாடுகளை வெளிவாரித் தரப்பினர்களுக்கு ஒப்படைத்தல் (KPOS) ஆகிய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய ஏனைய பணிகளை மேலும் மேம்படுத்துதல், பணிகள் ஏற்றுமதி வருமானத்தை மேலும் வளர்ச்சியடையச் செய்வதை உறுதிப்படுத்துவதற்கு அத்தியாவசியமானதாக உள்ளது. சந்தைப் பல்வகைப்படுத்தலின்போது, தென் ஆசிய பிராந்தியத்தில் பெறக்கூடிய அனுகூலமான நிலைமைகள் தொடர்பாக போதியளவு கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். இப் பிராந்தியத்தின் நாடுகளுக்கு இலங்கையினால் மேற்கொள்ளப்படுகின்ற ஏற்றுமதிகள் அதிகரித்துள்ளதன் மூலம் இதனை ஏற்கனவே காணக்கூடியதாக உள்ளது. இந்திய-இலங்கை இரு தரப்பு சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் (ISFTA) பின்னர் இலங்கையின் ஆறாவது மிகப் பெரிய ஏற்றுமதிச் சந்தையாக இந்தியா மாறியுள்ளது. ஏனைய பிராந்திய நாடுகளும் இலங்கையின் முக்கியமான வர்த்தக பங்காளர்களாக மாறி வருவதோடு, ஏற்கனவே இலங்கை பாகிஸ்தானுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்றில் (FTA) கைச்சாத்திட்டுள்ளது. ஒருங்கிணைந்த பொருளாதார பிராந்தியமொன்று உருவாகுவதன் மூலம் ஒப்பீட்டளவில் பாரிய நுகர்வோர் தளமொன்றில் பிரவேசிக்க இயலுமாயிருக்கும் என்பதோடு, இது வெளிநாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதில் முக்கியமானதொரு காரணியாக அமையும். அதேவேளை, துறைமுகப் பணிகளுக்கு உயர் போட்டி நிலையொன்று உள்ள சூழ்நிலையினுள் நாட்டிலுள்ள பல்வேறான பிரதானமான துறைமுகங்களின் அபிவிருத்திக் கருத்திட்டங்களைக் கவனத்திற் கொள்கின்றபோது, புதிய வர்த்தக மாதிரியொன்றின் ஊடாக துறைமுகத் துறையின் செயற்பாடுகளை மூலோபாய ரீதியில் அபிவிருத்தி செய்தல் மிக முக்கியமானதாக இருக்கும். இதன் பொருட்டு தென் ஆசிய நுழைவிடக் (SAGT) கம்பனியின் வெற்றிகரமான செயற்பாட்டை ஆராய்கின்றபோது அரச-தனியார் கூட்டுமுயற்சி வெற்றியளித்துள்ளதென்பது ஏற்கனவே உறுதிசெய்யப்பட்டுள்ளது. அதேபோன்று, இதற்கான மூலதனத்தின் பொருட்டு தமது பங்களிப்பை வழங்குமாறு பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்து, இந்த நிறுவனங்களின் உரிமையை மேலும் விஸ்தரிப்பதாயிருப்பின் அதன் மூலம் சமூகத்திற்கு உயர் பெறுமானமொன்று கிடைக்கும். இதன் மூலம் இவ்வாறான நிறுவனங்களின் நல்லாட்சி மற்றும் பொறுப்புக்கூறும் தன்மையை மேலும் விருத்திசெய்ய முடியுமாயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதியியல்துறை உட்கட்டமைப்பு வசதிகள்

நிதியியல் துறையின் ஒட்டுமொத்தமான உள்ளார்ந்த ஆற்றலை பொருளாதார வளர்ச்சிக்கு பயன்படுத்தக்கூடியவாறும் நிதியியல் துறையின் தாக்குப்பிடிக்கும் பலத்தை வளர்க்கும் பொருட்டும் நிறுவன மற்றும் சந்தை உட்கட்டமைப்பு வசதிகளை விஸ்தரிப்பதற்கும் பலப்படுத்துவதற்குமாக மத்திய வங்கி மேலதிக நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. நிதியியல் வசதிகளை வழங்குவதற்கு பன்னாட்டு வர்த்தகத்துக்கும் முதலீடுகளுக்கும் வசதி ஏற்படுத்தும் பொருட்டும் அதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை உலகளாவிய பொருளாதாரத்துடன் இணைக்கின்ற நோக்கத்துடனும் ஏற்றுமதி, இறக்குமதி வங்கியொன்றை (EXIM Bank) தாபிப்பதற்கு முன்மொழியப் பட்டுள்ளது. இந்த வங்கியின் மூலம் நாட்டிலுள்ள பண்டங்கள், பணிகள் மற்றும் மூலதனம் தொடர்பான பன்னாட்டு வர்த்தகத் தொழிற்பாடுகளை வளர்க்கும் பொருட்டு இறக்குமதியாளர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் நிதி வசதிகள் வழங்கப்படும். சந்தை வளர்ச்சி தொடர்பில் முன்னோக்கிய வர்த்தக பண்டங்கள் உடன்படிக்கை, வர்த்தகப் பண்டங்களைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் பிணைக் காப்பீட்டு நடவடிக்கைகள் உள்ளடங்கிய பலநோக்குச் சொத்துக்கள் பரிமாற்ற பொறிமுறையொன்று தாபிக்கப்படும். இலங்கை உள்ளடங்கலாக அநேகமான அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் கம்பனிகளின் நிதியிடலுக்கான கூட்டுக் கடன் சந்தை முன்னேறிய நிலைமையில் இல்லாததால் நிதியியல் வசதிகளை வழங்குகின்ற பிரதானமான மூலமாக வங்கித் துறை உள்ளது. இதன் பிரகாரம், கூட்டு முறிகள் சந்தையை மேலும் விருத்தி செய்கின்ற நோக்கத்துடனும் பொருளாதார நிதியிடலின் தேவையின் பொருட்டும் அதற்கு அதிக பங்களிப்பை வழங்கக்கூடிய விதத்தில் புதிய வழிமுறைகள் சில மேற்கொள்ளப்படும்.

மத்திய வங்கிக் கொள்கைத் தோற்றப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, உள்நாட்டு நிதியியல் துறையை முன்னேற்றுவதற்கும் இலங்கையின் பொருளாதாரம் உலகளாவிய சந்தையுடன் ஒருங்கிணைவதை மேலும் விருத்தி செய்யும் பொருட்டும் மூலதனக் கணக்கின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில், செலாவணிக் கட்டுப்பாடுகள் மேலும் தளர்த்தப்படும். நிதியியல் துறைக்கு சுதந்திரம் அளிக்கின்றபோது மத்திய வங்கி எப்போதும் அதனைப் படிப்படியாகத் தளர்த்தி முழுமையாக விடுவிக்கின்ற வழிமுறை யொன்றைக் கடைப்பிடிப்பதோடு, அதன் மூலம் நிதியியல் முறைமையின் ஒட்டுமொத்தமான உறுதிப்பாட்டை உறுதி செய்து, பொருளாதாரத்திற்கு நன்மை பயக்கச் செய்தல் எதிர்பார்க்கப்படுகிறது. இதன் பிரகாரம், வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் வளர்ச்சியைக் கவனத்திற் கொண்டு 2010 மார்ச் மாதத்தில் இலங்கையர்களுக்கு வெளிநாடுகளில் வங்கிக் கணக்குகளைத் திறத்தல் மற்றும் பேணிவருதல் தொடர்பில் நிலவிய செலாவணிக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு பல்வேறு சொத்துக்களில் முதலீடு செய்வதற்கு அதிக நெகிழ்வுத் தன்மையொன்று வழங்கப்பட்டது. கொள்கைத் தோற்றப்பாட்டில் மேலும் பல நடவடிக்கைகள் வெளியிடப்பட்டதோடு, அதன் பிரகாரம் தனியார் துறையினருக்கு மாற்று முதலீடுகளுக்கும் கடன் பெறுவதற்குமான வாய்ப்புகள் உருவாகும். மேலும் வெளிநாட்டவர்களுக்கு நிதியியல் சொத்துக்களில் முதலீடு செய்வதற்கு அதிக வாய்ப்புகள் அளிக்கப்படும். இச்செயற்பாடுகளின் மூலம் தொடர்ந்தும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வளர்ப்பதற்கும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையை உறுதிப்படுத்துவதற்கும் இயலுமாக இருக்கும்.

பல்வேறான வெளிவாரி மற்றும் உள்ளக அதிர்ச்சிகளுக்கு தாக்குப்பிடிப்பதற்கு ஏற்றுமதித் துறைக்கு உள்ள இயலுமையை மேலும் பலப்படுத்துதல் அவசியமாகும். பல்நார் உடன்படிக்கை இரத்தாகியமை, முன்னெப்போதும் இல்லாதவாறு எரிபொருள் மற்றும் பண்டங்களின் விலைகள் அதிகரித்தமை, யுத்த ஆபத்து மிகைக் கட்டணம் விதிக்கப்பட்டமை உள்ளடங்கிய பல்வேறான அதிர்ச்சிகளுக்கு அண்மைக் காலத்தில் இலங்கையின் ஏற்றுமதித் துறை வெற்றிகரமாக முகம்கொடுத்தது. வர்த்தக முன்னுரிமைகள் தொடர்பான பொது முறை GSP+ யின் கீழ் ஐரோப்பிய சந்தையில் பிரவேசிப்பதற்கு இலங்கைக்குக் கிடைக்கின்ற முன்னுரிமை வசதிகள் 2010 ஆகஸ்ட் மாதம் வரை செயற்படும் என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. இலங்கை அரசாங்கம், ஐரோப்பிய ஒன்றியத்தினால் எழுப்பப்பட்ட ஒருசில விடயங்கள் தொடர்பில் அவர்களுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது. மிகவும் சிரமமான காலங்களில் ஏனைய உற்பத்தியாளர்களுடன் போட்டியிட்டு இலங்கை உற்பத்தியாளர்களால் ஐரோப்பிய சந்தையில் பிரவேசிப்பதற்கு இந்த வர்த்தக முன்னுரிமை தொடர்பான பொது முறையின் அனுகூலங்கள் உதவியாயமைந்தன. எவ்வாறாயினும், நாட்டின் வெளிநாட்டு வர்த்தகத்தின் எதிர்காலம், உற்பத்தி செய்யப்படுகின்ற பண்டங்கள் மற்றும் பணிகளின் ஒப்பீட்டு அனுகூலத்தை அடிப்படையாகக் கொண்டிருக்குமேயன்றி முன்னுரிமை தீர்வை வரியின் மீது தங்கியிருக்காது என்பதோடு அது தெளிவாக அடையாளம்காணப்பட வேண்டிய ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயமாகும். ஆதலால் உள்நாட்டுக் கைத்தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற பண்டங்களுக்குச் சமமான பண்டங்களை உற்பத்தி செய்கின்ற ஏனைய நாடுகளின் உற்பத்தியாளர்களுடன் போட்டியிடுவதற்கு இயலுமானவாறு தமது உற்பத்திகளின் சேர் பெறுமதியை அதிகரிப்பதையும், தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதன் மூலம் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொள்ளுதல் வேண்டும். இதற்கு முன்னர் இலங்கையின் ஏற்றுமதியாளர்கள் கஷ்டமான காலங்களில் வெற்றிகரமாக முகம்கொடுத்து அவர்களது தாக்குப்பிடிக்கும் ஆற்றலை தெளிவாக வெளிக்காட்டியுள்ளனர் என்பதோடு, எதிர்காலத்திலும் புதிய வழிமுறைகளைப் பயன்படுத்தி அவர்கள் ஒப்பீட்டு அனுகூலத்தை விருத்தி செய்வதைத் தொடர்ச்சியாக மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சுற்றுலாத் துறை

சமாதானம் மலர்ந்துள்ளதைத் தொடர்ந்து நாட்டின் சுற்றுலாத்துறைக்குப் பொருத்தமானதொரு சூழல் உருவாகியுள்ளதோடு அதன் மூலம் பல்வகைப் பெறுபேறுகள் பொருளாதாரத்திற்குக் கிடைக்கக் கூடியதாயுள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளமை மற்றும் சுற்றுலாத்துறையில் புது மலர்ச்சி ஏற்பட்டுள்ளமையின் மூலம் சமாதானம் மலர்ந்துள்ளதன் பிரதிபலன்களை ஏற்கனவே காணக்கூடியதாக உள்ளது. 2010 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறிப்பிடத்தக்களவில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதோடு, அந்தப் போக்கு எதிர்வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து நிலவலாம். அதிகரித்து வருகின்ற வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளுக்கான வசதிகள், சுற்றுலா முடிவிடங்களிலுள்ள சுற்றுலாத்துறை வசதிகளை விஸ்தரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. பயனுறுதியான சந்தைப்படுத்தல் மூலோபாயங்களைச் செயற்படுத்துவதன் ஊடாக எதிர்வரும் ஒருசில ஆண்டுகளினுள் சுற்றுலாப் பயணிகளின் வருகை ஆண்டுக்கு ஒரு மில்லியனையும் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. பாதகமான சுற்றுலாத்துறை ஆலோசனைகள், திட்டமிடல்களிலுள்ள குறைபாடுகள், உட்கட்டமைப்பு வசதிகள் போதியதாயில்லாமை, சுற்றுலாத்துறைப் பணிகளை வழங்குவதிலுள்ள பலவீனங்கள் மற்றும் பயனுறுதியற்ற சந்தைப்படுத்தல் மூலோபாயங்களின் காரணமாக கடந்த ஒருசில வருடங்கள் பூராவும் இலங்கையின் சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக் கட்டங்கள் மூடி மறைக்கப்பட்டிருந்தன. ஆதலால் சுற்றுலாத்துறையின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கு நீண்ட கால சுற்றுலாத்துறை அபிவிருத்தித் திட்டமொன்றைத் தயாரித்தல் அவசியமாகும். இலங்கையை சுற்றுலாப் பயணிகளின் பல்வேறான விருப்புகளுக்குப் பொருத்தமான முடிவிடத்துடன் கூடிய ஒரு நாடாக மாற்றுவதற்கும், மிகவும் குறுகியதொரு காலத்தினுள் அடையக்கூடிய பல்வகைப்படுத்தலுடன் கூடிய சுற்றுலாத்துறைக் கவர்ச்சிகளை உருவாக்குவதன் மூலம் அனுகூலங்களைப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். சுற்றாடல், உல்லாச விளையாட்டுகள், திகிலூட்டும் செயற்பாடுகள், மத அலுவல்கள், கலாசார மற்றும் உள்நாட்டு மரபுரிமைகளுடன் கூடிய சுற்றுலாத்துறை நடவடிக்கைகளின் ஊடாக இலங்கைக்கே உரியதான சுற்றுலாத்துறையொன்றை மேம்படுத்துவதற்கான இயலுமை நிலவுகின்றது. சுற்றுலாத்துறை ஹோட்டல்கள், உணவகங்கள் மற்றும் உல்லாச விடுதிகள், போக்குவரத்து வசதிகள், களியாட்ட மற்றும் உபசரிப்புச் செயற்பாடுகளுக்கு வசதிகளை வழங்குதல், மருத்துவ, விளையாட்டு மாநாடுகள், சாப்புச் சவாரிகள் மற்றும் விருந்தோம்பல்களுடன் கூடிய ஏனைய உதவிச் சேவைகள் ஆகிய விரிவானதொரு வீச்சிடையில் சுற்றுலாத்துறையில் முதலீட்டு வாய்ப்புகள் பரவியுள்ளன. மேலும், உள்நாட்டு விமானப் பயணங்களை மேம்படுத்தலும் சுற்றுலாக் கைத்தொழிலின் வளர்ச்சிக்கு உதவியாயமையும்.

## சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துதல் அவசியமாகும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கேள்விகளுக்கு நேரடியாகவே நிரம்பல் செய்வதன் மூலமும், பாரிய அளவிலான கைத்தொழில்களுக்கு நிரம்பல்களைச் செய்வதன் மூலமும் நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் பிரதேச சமமின்மையைக் குறைப்பதற்கு பங்களிப்புச் செய்வதன் ஊடாகவும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களால் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்க முடியும். உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியின் பாதகமான தாக்கத்தையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களில் தாக்கத்தை ஏற்படுத்திய உள்நாட்டுக் கேள்வியில் உருவாகிய வீழ்ச்சியையும் கவனத்திற் கொண்டு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக மீள்நிதியிடல் கடன் திட்டங்கள் உள்ளிட்ட பல நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அரச நிதி வழங்கல்களுக்கான வரையறைகளின் காரணமாக அரசாங்கத்திலிருந்து எதிர்பார்க்கக்கூடிய நேரடியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிவாரணங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஆதலால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் நிதியிடல் வசதியீனங்களைக் குறைப்பதற்கான நோக்கத்துடன் அத்தகைய கைத்தொழில்களுக்கான கடன்களுக்கு பிணை நிற்கின்ற வேலைத்திட்டமொன்றைத் தாபிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இதன் கீழ், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கு போட்டி ரீதியிலான வட்டி வீதங்களின் கீழ் வங்கிகளிலிருந்து கடன் பெறுவதற்குள்ள இயலுமை அதிகரிக்கும் என்பதோடு, அவர்களது தொழில்முயற்சிகளின் இயலளவையும் பயனுறுதியான விதத்தில் விஸ்தரிக்க முடியுமாயிருக்கும். மேலும், பல்வேறு தாக்கங்களுக்கு உள்ளாகிய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கு உதவியளிப்பதற்கு முன்னுரிமை அடிப்படையில் மூலோபாய அணுகுமுறையொன்று அவசியமாயுள்ளது. மேலும், இந்த முயற்சிகளுக்கு நேரொத்த வகையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் உருவாக்கப்பட்டு தற்போதுள்ள சவால்களுக்கு வெற்றிகரமாக முகம்கொடுக்கும் வகையில் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மீள்ஒழுங்கமைக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, அவர்களது பயனுறுதியும் மேம்படுத்தப்படுதல் வேண்டும்.

## பொருளாதார வளர்ச்சியும் சுற்றாடல் பாதுகாப்பும்

சமாதானம் மீள நிறுவப்பட்டதன் மூலம் உருவாகியிருக்கின்ற சாதகமான நிலைமை, சிறந்த பேரண்டப் பொருளாதார சூழல் மற்றும் உலகளாவிய பொருளாதாரம் மீட்சியடைந்தமை ஆகியன மூலம் பொருளாதாரம் துரிதமாக வளர்ச்சியடைவதற்கான பொருத்தமானதொரு பின்னணி உருவாகியுள்ளது. உயர் மட்டத்திலான வளர்ச்சியை அடையப்பெறும் பொருட்டு பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் உயர் சாத்தியத் தன்மையொன்று நிலவுகின்றது. துறைமுகங்கள், விமான நிலையங்கள், மின்சாரம், நெடுஞ்சாலைகள், புகையிரத வீதிகள், நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல் ஆகிய துறைகளில் உட்கட்டமைப்பு வசதிக் கருத்திட்டங்கள் பெருமளவில் செயற்படுத்தப்படுவதன் மூலம் உயர் பொருளாதார வளர்ச்சிக்கு வசதியேற்பாட்டினைச் செய்து பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவை உயர்த்தலாம். எவ்வாறாயினும், துரித பொருளாதார வளர்ச்சியின் மூலம் சவால்மிக்க சுற்றாடல் தாக்கங்கள் உருவாகலாம் என்பதால் உயர் பொருளாதார வளர்ச்சியும் சுற்றாடல் பாதுகாப்பும் ஒன்றுடனொன்று சமாந்திரமாகப் பேணிவரப்படுதல் வேண்டும். ஆதலால், அபிவிருத்திச் செயற்பாட்டின்போது சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்

கொழும்பு - 13, 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தையிலமைந்துள்ள (ஆட்டுப்பட்டித்தெரு) கௌரி அச்சகத்தில் அச்சிடப்பட்டு இலங்கை மத்திய வங்கி தொடர்பூட்டல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org